பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை 28.11.2017 கதிர் 23

## யாழ். பல்கலையின் வவுனியா வளாகம் நேற்று முதல் பூட்டு

**பிரபாகரனின்பிறந்தநாளினால் உருவானமுரண்பாட்டைஅடுத்து**

வவுனியா, நவ. 28

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் நேற்று மாலை முதல் காலவரைய றையின்றி மூடப்பட்டுள்ளதாக

பக்கம் 18

## யுத்தம் முடிவடைந்த பின்னர் முதல் தடவையாக

# சகல துயிலும் இல்லங்களிலும் பேரெழுச்சியுடன் நினைவேந்தல்

## உறவுகள் கண்ணீர் விட்டுக் கதற சம நேரத்தில் ஈகச்சுடர் எழுந்தது

யாழ்ப்பாணம், நவம்பர் 28

தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த தன்னலமற்ற வீரமறவர்களுக்கு - உயிர்கொடையாளர்களுக்கு - விளக்கேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நேற்றுத் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் அனைத்திலும் மாவீரர் கல்லறைகள் நேற்றுக் கண்ணீரால் நனைந்தன.

பக்கம் 18

## தமிழரசு அலுவலகத்திலும் மாவீரர் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், நவ. 28

தமிழரசுக் கட்சியின் தலைமையகத்திலும் நேற்று மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியில்உள்ளஅலுவலகத்தில் நேற்று மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கட்சியின்தலைவர்மாவை

பக்கம் 18

## கோப்பாயிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் ஒன்றுகூடி நேற்று அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம்கோப்பாய் துயிலும் இல்லத்துக்கு முன்பாக நேற்று மாலை மாவீரர்களுக்கு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதன்மைச் சுடரை 3 மாவீரர்களின் தந்தை சின்னத்தம்பி அப்புலிங்கம் ஏற்றிவைத்தார்.

பக்கம் 18

## நாடாளுமன்றத்திலும் மாவீரருக்கு வணக்கம்

கொழும்பு, நவ. 28

தமிழர் தாயகத்தில் மாவீரர் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் பட்ட நிலையில், இலங்கை நாடாளுமன்றத்திலும் நேற்று மாவீரர்களுக்கு

பக்கம் 18

## மழைக்கு மத்தியிலும் மாவீரர்களுக்கு யாழ். பல்கலையில் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ. 28

யாழ். பல்கலைக்கழகத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் எழுச்சி கீதங்கள் இசைக்க பல்கலைக்கழக

பக்கம் 18



## ஒட்டகப்புலத்தில் புதனன்று 29 ஏக்கர் காணிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

வலிகாமம் வடக்கு ஒட்டகப்புலத்தில் இராணுவத்தினர் வசமுள்ள 29 ஏக்கர் காணிகள் நாளை புதன்கிழமை விடுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம்வடக்குவல்லை

பக்கம் 18

## சாவகச்சேரி நகர சபைக்கு மட்டும் வடக்கில் தேர்தல்

**வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்கு பணிப்பு**

கொழும்பு, நவ. 28

சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளாத சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட 93 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களுக்கு வேட்புமனுக்களைக் கோருமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி

பக்கம் 18

## கிழக்குப் பல்கலையிலும் உணர்வுபூர்வமான அஞ்சலி



மட்டக்களப்பு, நவ. 28

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள்பல்கலைக்கழக கலைகலாசாரபீடமாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர் டினேஸ்காந் தலைமையில்நடைபெற்ற

பக்கம் 18

## திலீபனின் நினைவிடத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல்

**மூன்று மாவீரர்களின் தாயார் முதன்மைச் சுடர் ஏற்றினார்**



யாழ்ப்பாணம், நவ .28

யாழ்ப்பாணம்நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நேற்று முற்பகல் 11.10 மணிக்கு தமிழீழ மாவீரர் நாள்அஞ்சலிநிகழ்வுஇடம்

பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir



# கனகபுரம் துயிலுமில்ல புனரமைப்பு பணிகளை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் உத்தரவு!

’கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை மீளமைப்பதற்கான பணிகளை உடனடியாக இடைநிறுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.



பிரதமரின் வசமுள்ள, அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சே, கிளிநொச்சி பிரதேசசபை மூலம் முன்னெடுக்கப்படும், மாவீரர் துயிலுமில்ல புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கனகபுரம் துயிலுமில்லத்தின் சுற்றுச் சுவரை அமைப்பதற்கு, 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் துயிலுமில்லங்களை தாவரவியல் பூங்காக்களாக பராமரிப்பதற்கும், இந்த நிதி ஒதுக்கீட்டுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, மாவீரர் துயிலுமில்லங்களை புனரமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், துயிலுமில்ல புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அந்தப் பணிகள் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெண்களின் உழைப்பு மிகவும் முக்கியமானது!

நாடாளுமன்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்



சர்வதேச ரீதியிலும் இலங்கை என்ற ரீதியிலும் பெண்களின் உழைப்பு சக்தி மிகவும் முக்கியமானது என்று நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெறும் வரவு- செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போதே இதனை மேம்படுத்த வேண்டும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது பெண்களின் பலம் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் சபையில் விளக்கமளித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்காலிகமாக இதற்கு பழைய தேர்தல் முறை பொருத்தமானதாகும். நாமும் இதற்கே உடன்படுகின்றோம். பெண்களுக்கு உள்ள சந்தர்ப்பம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

உலகளாவிய ரீதியிலும் இலங்கை என்ற ரீதியிலும் பெண்களின் உழைப்பும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமான தாகும். மகளிர் படையணி சக்தி மிகவும் முக்கியமான தாகும். மகளிர் படையணியை மேம்படுத்த வேண்டும்.

பெண்களுக்காக சிறந்த சேவையை மேற்கொள்ளக்கூடிய இடங்களை மேம்படுத்த வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த சட்டத்தின் மூலம் செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் எந்தவித குறைபாடும் இல்லை

அமைச்சர் பைசர் முஸ்தபா சபையில் அறிவிப்பு

கொழும்பு, நவ. 28

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் எந்தவித குறைபாடும் இல்லை என்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தின் 15 ஆம் நாள் விவாதம் நேற்று இடம்பெற்றது.

நேற்றையதினம் வெளி நாட்டு வேலைவாய்ப்பு, பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள், சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் தொடர்பிலான அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் விவாதம் நேற்றுக்காலை ஆரம்பமானது.

இதன்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் ஏன் வெளிநாட்டுக்குப் போனார்? என்று கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு அமைச்சர் பைசர் முஸ்தபா பதிலளிக்கையில்-

மோல்டா நாட்டின் உள்ளூராட்சி மன்ற மாநாடு நடைபெற்றது. இதற்கு இலங்கைக்கும் அழைப்பு கிடைத்தது.

ஜனாதிபதியின் அனுமதியுடன் மோல்டாவுக்குச் சென்றேன். நாட்டை விட்டு ஓடவில்லை. நாட்டின் தலைவருடன் அனுமதி பெற்றேன். அமைச்சரவை ஆவணத்திலும் இதனை நான் குறிப்பிட்டேன். நான் சட்டத்தரணி, எனக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நான் எனது பதவியை கேலிக்குட்படுத்த மாட்டேன்.

எனது ஜனாதிபதி சட்டத்தரணி பதவி பெறுமதிமிக்கதாகும். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கே செயற்பட்டேன். நாட்டிற்கும் அரசியல் கட்சிக்கும் நீதியை நிறைவேற்றுவேன். தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தயாரிக்கப்பட்டபோது அது தொடர்பாக அனைத்து கட்சிக்கும் தெளிவுபடுத்தினேன்.

வர்த்தமானியில் குறை பாடுகள் இல்லை. பொறுப்புடன் நான் இதை கூறுகின்றேன். தற்பொழுது இடைக்கால உத்தரவே வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பொறுப்புடன் உண்மையாகச் செயற்பட்டேன். பொது மக்கள் நீதி மன்றத்திற்கு செல்லத் தயார். குளறுபடியான வர்த்தமானி தயாரிக்கப்படவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இதில் எந்த வித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை கடல் எல்லை விரிவுபடுத்த ஐக்கியநாடுகள் சபை இணக்கம்

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

அடுத்த வருட இறுதிக்கு முன்னர் சர்வதேச கடற் பிராந்தியத்தில் இலங்கைக்கான கடற்பகுதி மேலும் விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார் .

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் நடத்தப்பட்ட பேச்சு வெற்றியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

குளங்களில் நீர்வாழ் உயிரினங்களை அபிவிருத்தி செய்வதற்காக இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் இரண்டரைக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் என்ற ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி பிரிவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இதற்கான திட்டம் முன்னெடுத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்க நடவடிக்கை

கொழும்பு நவ. 28

தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். இவ்வாறான ஆசிரியர்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது



என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வாய் மூலம் முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

கொடுப்பனவை வழங்கும் போது சில சேவைகளில் பிரச்சினை ஏற்படக்கூடும். இது தொடர்பாக கவனம் செலுத்தி இந்த ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்க முயற்சிப்பேன் எனக் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(க)

# முதலில் ராணுவத்தினரையே நினைவு கூரவேண்டும் சிவாஜி

## கூறுகின்றார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, நவ.28

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவு கூரும் சிவாஜிலிங்கம் முதலில் இராணுவத்தினரைத்தான்நினைவு கூரவேண்டும் என தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நிகழ்வின் பின்னர் மாவீரர் நினைவேந்தல் தொடர்பாகக் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பியினரால் மாவீரர்களை நினைவுகூர முடிந்தால் ஏன் விடுதலைப் புலிகளுக்கு அதனைச் செய்யமுடியாதெனச் சிலர் கேள்வி கேட்கின்றனர். விடுதலைப் புலிகள் என்பது போரில் தொடர்புபடாத, அரசியலில் இருக்காத மக்களைக் கொலை செய்த இயக்கம். சிவாஜிலிங்கம் அல்லது வேறு யாராகிலும் விடுதலைப் புலிகளின் தலைவரைக் கொண்டாடினால் கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் அந்த இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் பிரதிவாதிகளாக, பொறுப்புக் கூறவேண்டியவர்களாக அவர்களே இருக்க வேண்டும்.

மீண்டும் ஒருமுறை பயங்கரவாதிகளை வீரர்களாக மாற்ற முயற்சிக்கிறவர்களும் பயங்கரவாதிகள் ஆவர். ஜனநாயகவாத நாட்டை முன்கொண்டுசெல்ல வேண்டுமென்றால், ஜயஸ்ரீ மகா விகாரை, தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்திய – அதேபோல பிக்குகளையும், மக்களையும் கொலை செய்தவர்களை வீரர்களாக நினைப்பவர்களும் பயங்கரவாதிகள்தான். அவர்களுக்கு எதிராக நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அமிர்தலிங்கம் முதல் யோகேஸ்வரன் வரை படுகொலை செய்தவர்கள் இராணுவம் அல்லர், விடுதலைப் புலிகளாவார். அதனைத் தமிழ் மக்களும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கில் அரசியலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் இராணுவத்தினால்தான் உருவாகியிருக்கிறது. அப்படியல்லாவிட்டால் தமிழ்ச்செல்வனின் காலைக் கழுவிக்கொண்டிருக்கும் அரசியல்தான் இன்று இடம்பெற்றிருக்கும். சிவாஜிலிங்கம் முதலில் இராணுவத்தினரை நினைவுகூர்ந்துதான் மாவீரர் தினத்தை அனுஷ்டித்திருக்க வேண்டும். ஏனென்றால் அவருக்குக்கூட விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது – என்றார்.




# கோட்டாவுக்கே அரசு இப்போது அஞ்சுகிறது

## கூறுகின்றார் கம்மன்பில

கொழும்பு, நவ.28

கோட்டாபய ராஜபக்ஷவே தற்போது அரசுக்கு இருக்கும் பெரிய அரசியல் அச்சுறுத்தல் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷகளவுபொய் இல்லாததிறமைசாலி என்பதைக் கட்சி பேதமின்றி முழு நாடும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அரசின் அச்சத்துக்கு இதுவே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் ஏற்கனவே பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். எனினும் இந்த அநீதியானகைதுக்கு எதிராகவரலாற்றில் என்றுமில்லாத வகையில் எதிர்ப்பு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவரைக் கைது செய்ய அரசு கொஞ்சம் தயங்குகிறது.

புதிய பிரிவினைவாத அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் கூட்டங்களை நடத்தி வருவதால், மகிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்த புகழ் பெற்றவராக கோட்டாபய ராஜபக்ஷ மாறியுள்ளார். இதனால், அவரைக் கைதுசெய்து அவரது குரலை அடக்க அரசு முயற்சித்து வருகிறது – என்றார்.

# இப்போது பாவமன்னிப்பு கேட்கிறார் டக்ளஸ் எம்.பி.

## சிவாஜிலிங்கம் நேற்றுச் சாடல்



யாழ்ப்பாணம், நவ.28

கடந்த காலத்தில் ஆட்சியாளர்களோடு சேர்ந்திருந்து தேனிலவு கொண்டாடிய டக்ளஸ் தேவானந்தா தற்போது பாவ மனிப்புக் கோருகின்றார். அவருக்குப் பாவ மன்னிப்பைக் கொடுப்பதா இல்லையா? என்பதைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் தமிழ் மக்கள்தான்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணசபை ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கும் போது, தமிழர் தங்களது உறவுகளை நினைத்து உணர்வுகளை வெளிப் படுத்த இடம்கொடுங்கள். அதற்கு எவரும் தடையாகவோ இடையூறாகவோ இருக் கக் கூடாது என்றார்.

இது தொடர்பில் கேட்டபோதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலத்தில் ராஜபக்ஷாக்களின் பங்காளியாக இருந்து அவர்களோடு தேனிலவு கொண்டாடியபோது இவ்வாறானகருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் வெளியிடவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை நாம் வடக்கு மாகாண சபையின் முன்பாகக் கடைப்பிடித்தபோது ஏற்றிய சுடரைச் சிங்கள பொலிஸ் அதிகாரி கீழே தள்ளி விழுத்திச் சப்பாத்துக் காலால் ஏறி மிதித்த போதும், முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கடற்படையின் அச்சுறுத்தல்களை மீறி அஞ்சலி செலுத்திய போதும், இராணுவ அச் சுறுத்தல்களின் மத்தியில் மாவீரர்களை நினைவு கூர்ந்த வேளையிலும் எதனையும் கூறாதவர், இன்றைய காலகட்டத்தில் தானும் ஏதேனும் கூறவேண்டும் என்றோ அல்லது பாவ மன்னிப்பு கோரவேண்டும் என்றோ இதனைக் கூறி இருக்கலாம் – என்றார் சிவாஜிலிங்கம்.

# லெப்டினனட் சங்கரின் நினைவிடத்தில் அஞ்சலி




யாழ்ப்பாணம், நவ.28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடி வீரச்சாவடைந்த முதல் மாவீரர் சங்கரின் நினைவிடத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக நேற்று மாலை 6.05 மணிக்கு மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

முதல் பெண் மாவீரர், 2ஆம் லெப்டினனட் மாலதி மற்றும் விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினராக இருந்த மூத்த உறுப்பினர் கப்டன் பண்டிதர் உள்ளிட்ட மாவீரர்களின் உருவப் படங்களும் லெப்டினனட் சங்கரின் உருவப்படத்துடன் வைத்து வீரவணக்கம் செலுத்தப் பட்டது.

# கோப்பாயிலும் நேற்று சிவாஜிலிங்கம் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.28

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாக இராசபாதை வீதியில் தமிழீழ மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணிக்கு உணர்வுபூர்வ மாக இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுடரேற்றினார்.

வடக்கு மாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் உள்ளிட்ட பலர் பங்கேற்று, துயில் கொள்ளும் ஆயிரக் கணக்கான வீர மறவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கோப்பாய் துயிலுமில்லத்தில் இராணுவ பிரிகேட் முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் வீதியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை, அஞ்சலி நிகழ்வுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்துக்கு முன்பாக இராணுவத்தினர் தமது பஸ்ஸை வீதியில் நிறுத்தி வைத்துள்ளனர்.

# இளைஞர்கள் இருவர் சாவகச்சேரியில் கைது

## வாள்களுடன் பயணித்தனர் என்கின்றனர் பொலிஸார்

சாவகச்சேரி மட்டுவில் – சிவன் கோவில் வீதியில், வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சாவகச்சேரிப் பொலிஸாரின் வீதிச் சோதனையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் இன்றியே மோட்டார் சைக்கிளில் பணித்தனர். ஏதேனும் குற்றச் செயலைப் புரிவதற்காகவே அவர்கள் இவ்வாறு சென்றிருப்பர் என்று நம்பப்படுகிறது. சாவகச்சேரியைச் சேர்ந்த 21மற்றும் 22 வயதுடைய இருவருமே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் பொலிஸ் தடுப்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் படுவர் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியது.

## நீதிபதியின் மெய்க்காவலர் கொலை:

# மூன்று சந்தேகநபர்களின் விளக்கமறியலும் நீடிப்பு

யாழ்ப்பானம், நவ.28

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கின் மூன்று சந்தேகநபர்களின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில், மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் டிசெம்பர் 11ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இணைப்புக்கு அழைப்பு

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் ஒரு நடவடிக்கையைத் தமது அறிவிப்பு ஒன்றுடன் ஆரம்பித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

*"அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்தும், இணைந்த வடக்கு - கிழக்கு குறித்தும், தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் கருத்து வேறுபாடுகளின்றி திருப்தியடையக் கூடிய வகையில் இருந்து பேசி, ஒரு முடிவை எட்ட வேண்டும். அதற்கு முன்வருமாறு முஸ்லிம் மக்களுக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்."* - என்று சம்மாந்துறையில் நடைபெற்ற மர்ஹூம் ஏம்.ஏ.அப்துல் மஜீட்டின் நினைவு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்திருக்கின்றார் இரா.சம்பந்தன்.

தமிழ் மக்கள் தங்கள் விருப்பம், அபிலாஷை, வேணவா, எதிர்பார்ப்பு யாது என்பதை கடந்த மூன்று, நான்கு தேர்தல்களில் தெட்டத் தெளிவாகவும், முரணிலையின்றியும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இணைந்த வடக்கு - கிழக்கு தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு என்பதே தமிழ் மக்களின் அபிலாஷையாக - ஆணையாக - இருந்து வருகின்றது.

இதில், வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய விவகாரமே பெரும் சர்ச்சையாக உருவெடுத்து நிற்கின்றது.

கிழக்கில், கணிசமான எண்ணிக்கையைக் கொண்டுள்ள முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் குறிப்பிடத்தக்க ஆதரவு இல்லாமல், இந்த விடயத்தை நிலை நிறுத்துவது சாத்தியமற்றது என்பதைக் கூட்டமைப்பின் தலைமை பகிரங்கமாக ஒப்புக் கொண்டு தனது இயலாமையை வெளிப்படுத்தி வருகின்றது.

முஸ்லிம்களின் ஆதரவில்லாமல் இணைப்பைச் சாத்தியமாக்குவோம் என்று பேசுவது, வெறும் வாய்ப் பேச்சுக்கு உகந்ததாக இருக்கலாம். ஆனால் தமிழர்களின் முன்னால் - தமிழர்களின் தலைமையின் முன்னால் - அவர்களிடம் உள்ள ஏதேனும் வலிமை மற்றும் பேரம் பேசும் ஆற்றல் ஆகியவற்றின் முன்னால் - அது காரிய சாத்தியமற்றது என்பது தெளிவு.

ஆகவே, இணைப்பைச் சாத்தியமாக்குவதாயின் முஸ்லிம்களையும் அரவணைத்துச் செயற்படுவதே ஒரேமார்க்கம் என்பதை கூட்டமைப்பின் தலைமை அண்மைக் காலத்தில் பல தடவைகள் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு அறிவித்தே வந்திருக்கின்றது. அத்தகைய முயற்சியைத் தொடர்வதற்கான ஏதுநிலைகளை - சூழ்நிலைகளை - தவறாமல் பேணுவது அவசியம் எனக் கூட்டமைப்புத் தலைமை சுட்டிக்காட்டி வருவதும் கவனிக்கத்தக்கது.

அந்த விடயத்தையே நேற்றுமுன்தினம் விடுத்த தமது அறிவிப்பு மூலம் பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பித்து வைத்திருக்கின்றார் சம்பந்தன்.

தாம் பேச அழைத்திருக்கும் விடயம் வெறும் இணைப்புப் பற்றியது மட்டுமல்ல. அல்லது இன்றைய பிரச்சினைக்கான ஒரு தீர்வு ஏற்பாடு மட்டுமல்ல. அதையும் தாண்டியது என்று சம்பந்தன் சுட்டிக்காட்டுகின்றார்.

*"எமது பிரதேசத்தில் எமக்குப் பின்னர் வருகின்ற எமது சந்ததிகளின் நிரந்தரப் பாதுகாப்பு, நிரந்தரமான உரிமைகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவை இந்த விடயங்கள். அவற்றை உறுதிப்படுத்துவதற்கு நாம் அமர்ந்திருந்து பேசுவோம். ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் - எல்லோருக்கும் திருப்தி தருகின்ற - ஒரு முடிவை எட்டுவோம். வாருங்கள்!"* என்பதே சம்பந்தனின் அழைப்பு.

சம்பந்தனின் - கூட்டமைப்பின் - இந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு முக்கியமான இரண்டு விடயங்கள் அவசியம். அவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இது, முதலில் தமிழர், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பரஸ்பர விவகாரம். ஆகவே இந்த இரண்டு தரப்புகளிலும் உள்மட்டக் கலந்துரையாடல்கள் அவசியம். அதாவது - இரு தரப்புகளுமே தங்களுக்குள் விரிவான கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்களை நடத்த வேண்டும்.

அதாவது தமிழர்கள் தரப்பும், முஸ்லிம்கள் தரப்பும் முதலில் தத்தமது கட்சிகள், இயக்கங்கள், அமைப்புக்கள் கடந்து இந்த விடயத்தைத் தமது இனமட்டத்துக்குள் பேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்.

பின்னரே தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் கூடியிருந்து பேசித் தீர்மானிக்க வேண்டும்.

சமகாலப் பிரச்சினைகள், அரசியல் சூழ்நிலைகள், தத்தமது தனிப்பட்ட மற்றும் கட்சி சார்ந்த அரசியல் நலன்கள் ஆகியவற்றுக்கு அப்பால் நின்று, சிந்தித்து, எதிர்கால இலக்கோடு, அவர்கள் விடயங்களை அணுக வேண்டும்.

அப்போதுதான் வருங்கால சந்ததிகளுக்கும் அமைதியான வாழ்வை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு தீர்க்கமான முடிவை எட்ட முடியும்.

தமிழ், முஸ்லிம் மக்களும், அவர்களின் தலைவர்களும் இதனை உணர்ந்து செயற்படுவார்களா?

# மாணவருக்கு கூனல் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு புதிய புத்தகப்பை!

### அறிமுகப்படுத்துமாறு மருத்துவர்கள் பரிந்துரை

கொழும்பு, நவ. 28

புத்தகப் பையின் எடை காரணமாகவே அநேக பாடசாலை மாணவர்கள் கூன் நோய்க்கு முகம் கொடுக்கின்றனர் என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கூனல் நோய் தொடர்பாக அறிவூட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புத்தகப் பையின் எடை காரணமாகவே அநேக பாடசாலை மாணவர்கள் கூன் நோய்க்கு முகம் கொடுக்கின்றனர்.



இதன்காரணமாக பாடசாலை மாணவர்களை கூனல் ஏற்படுவதில் இருந்து பாதுகாக்க புதிய புத்தகப்பை ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளோம்.

இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கூன் நோய்க்கு சத்திரசிகிச்சை நடத்தப்படுகின்றது.

கூன் ஏற்படுவதில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்காக புதிய புத்தகப்பைஒன்றைஅறிமுகப்படுத்துமாறு நிபுணத்துவ மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இந்த யோசனையைக் கருத்தில் கொண்டு அடுத்த வருடம் முதல் புதிய புத்தகப் பையை அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளோம்.

கூன் நோயால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி வழங்க முடியும். இலங்கையில் இது தொடர்பில் சத்திர சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் ராஜித நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள பெண்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யுத்தத்தின் பின்னர் வடபகுதிப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ற தலைப்பில் கடந்த ஜூலை மாதம் தேசிய மாநாடொன்றை நடத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாக மாநாட்டில் இனங்காணப்பட்ட சவால்களை எதிர்கொண்டு முன்னகர்வது தொடர்பான செயற்றிட்டங்களை வடிவமைத்து செயற்படுத்தி வருகிறது.

அதில் பெண் தலைமைகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் முக்கியமானவை. இதில் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்தி வருகின்றது. இதற்காக நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்ள ஆர்வமுள்ள பெண்களின் இயலாற்றலை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்கொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு நடை பெறவுள்ளது. இதில் தேர்தலில் போட்டியிட இருநூறுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள பெண்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இவர்களோடு பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்தோரும் பங்கு பற்றவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் புதிய தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பற்றி யாழ்.மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் த.அகிலன் கருத்துரை வழங்கவுள்ளார். இதனோடு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் 'அரசியலதிகாரத்தில் பெண்கள்' என்ற தலைப்பிலும் 'உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பு மற்றும் அதிகாரம்' தொடர்பாக சு.பரமநாதனும் உரையாற்றவுள்ளனர். இந்த நிகழ்வின் முடிவில் பெண்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான செயல் முறைத்திட்டமொன்று முன்மொழியப்படும்.

இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்புபவர்கள் 021 222 3668 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் தேவநாயகம் தேவானந்த் தெரிவித்துள்ளார். (இ)

# தமிழரசுக் கட்சியில் இணைந்தார் கடற்புலிகளின் மூத்த போராளி

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் முன்னாள் மூத்த போராளியும், மேற்கு பிராந்திய புலனாய்வு செயற்பாட்டாளருமான தம்பி என்று அழைக்கப் படும் தியாகராஜா அருட்செல்வம் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.



மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் வன்னி மாவட்ட தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் முன்னிலையில் தன்னை தமிழரசுக் கட்சியின் அங்கத்தினராக அவர் இணைத்துக் கொண்டார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க தாமும் இந்த கட்சியில் இணைந்து செயற் படவுள்ளேன் என்று முன்னாள் போராளிதம்பிஎன்று அழைக்கப்படும் தியாகராஜா அருட்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

கண்ணாக மணியாக ஒளிரும் பெண்கள் கண்ணியமாய் வாழ்வதற்கு உரிமை வேண்டும்.

16
2017

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

### நாளை

**29.11.2017**
**புதன்கிழமை**

நட்சத்திரம் : உத்திரட்டாதி பி.ப 1.30வரை
திதி : தசமி காலை 6.15 வரை
சுபநேரம் : 4.43 – 6.13 வரை
இராகுகாலம்: 12.13 – 1.43 வரை

# மாவீரர்களை நினைவுகூர அனுமதிக்க வேண்டும்

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு, நவ. 28

வடக்கு, கிழக்கில் போரில் இறந்தவர்களை சுதந்திரமாக நினைவு கூருவதற்கு இலங்கை அரசு தமிழர்களை அனுமதிக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான பிரித்தானிய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் போல் ஸ்கலி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அச்சுறுத்தல்கள் மற்றும் உரிமை மீறல்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து இடம்பெற்ற போதிலும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள், அழிக்கப்பட்ட கல்லறைகளை தூய்மைப்படுத்தி, நினைவு கூரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.



போரில் இறந்தவர்கள் தமிழர்கள் பகிரங்கமாக நினைவு கூருவதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.


போர் முடிவுக்கு வந்த பின்னர், நினைவுகூரல் முயற்சிகளை இலங்கை அரசு அச்சுறுத்தல்களை விடுத்து தடுத்து வந்துள்ளது.

போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் சிறிலங்கா அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் இருக்கின்றமை கவலையளிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாகவும், காலவரையறையுடனும், நடைமுறைப்படுத்துமாறு, ஐ.நா. உறுப்பு நாடுகளுடன் இணைந்து கோருகிறோம் என்று கூறப்பட்டுள்ளது.

(க)

## 12 நோய்களுக்கு தடுப்பூசிகள் அறிமுகம்



கொழும்பு, நவ.28

இலங்கையில் தேசிய மீள் சக்தி வேலைத்திட்டத்தின் கீழ், பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 12 நோய்களுக்கு தடுப்பூசிகளை அறிமுகப்படுத்தவுள்ளோம் என அபாயகர நோய் விசேட வைத்தியர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறந்த பலனை அளிக்கக் கூடிய தடுப்பூசி இவை என்பதால் சிறுவர் பராயத்தில் ஏற்படக்கூடிய இவ்வாறான நோய்களைக் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது.

அபாயகர நோய் விஞ்ஞான பிரிவு, டெங்கு நோய்க்காக புதிய தடுப்பூசியொன்றை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில் புத்திஜீவிகள் சபை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

தற்போது போலியோ போன்ற நோய்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. பிறப்பிலேயே உள்ள ஆஸ்மா நோயிலிருந்து விடுபடுவதற்கும் அம்மை மற்றும் ருபெல்லா ஆகிய நோய்களிலான பாதிப்பை குறைக்க முடிந்துள்ளது.

மேலும், மஞ்சள் காமாலை, இன்புளுவென்சா 'பி', ஜப்பானிஸ் என்சேபலஸ்ரிஸ் போன்ற நோய்களின் பாதிப்பையும் குறைக்க முடிந்துள்ளது.

சமீபத்தில் 6 வயது பாடசாலை பிள்ளைகள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.எச். பி.தடுப்பூசியின் மூலம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கர்ப்பப்பை புற்று நோயைத் தடுக்க முடியும்.

இதன்மூலம் நாட்டில் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் மீள் சக்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## நுவரெலியா மாவட்ட செயலாளராக புஸ்பகுமார நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு, நவ. 28

நுவரெலியா மாவட்ட செயலாளராக எம்.டி. புஸ்பகுமார நேற்றுக் காலை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா மாவட்ட செயலாளராக கடமையாற்றிய இவர் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் செயலாளர் பதவி வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை பிரதேச செயலாளராகவும், அம்பகமுவ பிரதேச செயலாளராகவும் கடமையாற்றிய இவர் வவுனியா மாவட்ட செயலாளராகவும் கடமையாற்றினார்.

சர்வமத வழிபாடுகளின் பின் கடமைகளை பெறுப்பேற்கும் நிகழ்வில் நுவரெலியா மாவட்ட முன்னாள் செயலாளர் பி.ஜி குமாரசிறி, வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகள், நுவரெலியா மாவட்ட செயலாளர், அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# நகைப்பிற்கு உள்ளாகியுள்ள நல்லாட்சி அரசு

## ஜோன் செனவிரட்ண தெரிவிப்பு



கொழும்பு, நவ. 28

நல்லாட்சி அரசு நகைப்பிற்குரியதாக மாறியுள்ளது என தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆளும் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வதும், விமர்சனம் செய்வதும் அதிகரித்துள்ளது.

இதனால், நல்லாட்சி அரசு நகைப்பிற்குள்ளாகியுள்ளது. சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரையும் ஜனாதிபதியை விமர்சனம் செய்கின்றனர்.

என்ன நடக்கப் போகின்றது? ஒழுக்கமற்ற செயலே அரங்கேறுகின்றது.

இவ்வாறு விமர்சனம் செய்கின்றமை பாரதூரமான பிழையாகும், இது அரசாங்கத்தின் இருப்பினை மோசமாக பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# கோல்டன் கிறவுண்ட் ஹோட்டல் ஜனாதிபதி தலைமையில் திறப்பு

கொழும்பு, நவ. 28

கண்டி அங்பிட்டிய என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறைக்கான கோல்டன் கிறவுண்ட் என்ற ஹோட்டலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் எஸ். பி.திசாநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir



## ‘உயிர் கொடுத்த வீரத்துக்காக உதிரம் கொடுப்போம்’

# கிழக்குப் பல்கலையில் இரத்ததான நிகழ்வு!






தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. மாணவர் ஒன்றியத்தின் தலைவர் டினேஸ்காந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகக் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி எம். ரவி, மற்றும் கல்வி சார், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வீரமரணம் எய்திய மாவீரர்களுக்கு மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர் ஒன்றியத்தின் தலைவரினால் ஈகச் சுடரேற்றப்பட்டு பின்னர் கலந்துகொண்ட அனைவராலும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் மாவீரர் தினத்தைக் கௌரவிக்கும் முகமாக உயிர் கொடுத்த வீரர்களுக்காக உதிரம் கொடுப்போம் எனும் தொனிப் பொருளில் இரத்த தான நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மாவீரர் பாடலும் ஒலிக்கச் செய்ததுடன் புலிக்கொடியும் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுழைவாயிலில் ஏற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் போராடும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்

## யோகேஸ் எம்.பி வலியுறுத்தல்



கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தை முழுமையாகப் பெற்றுள்ள மாகாண ஆளுநர், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வீதிகளில் போராடிக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றமையால் அதனைக் கருத்தில் கொண்டு மாகாண ஆளுநர் பல்வேறு திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 272 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையில் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

(ப)

# யானைகளின் அட்டகாசம் பாதுகாக்க கோரும் மக்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சூடுபத்திசேனைப் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதால் அப் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சூடுபத்திசேனைப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் திறக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ளது. அப்பகுதியில் வாழைச்சேனைமற்றும்ஓட்டமாவடிப் பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இந்தத் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் மூலம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆயிரம் கிலோ கிராம் பசளைகளைத் தயாரித்துக் கொள்கின்றனர். ஆனால் திண்மக் கழிவுக்கு உதவாத பொருள்களே இங்கு அதிகம் கொட்டப்படுகின்றன.

இப்பகுதியில் உணவுக் கழிவுகளையும் கொட்டுவதால் இதனை உண்பதற்காக யானைகள் அதிகம் வருவதுடன், அண்மித்து காணப்படும் காடுகளில் நிரந்தரமாக வசித்தும் வருகின்றன.

அத்துடன், அதனை அண்டியுள்ள வயல் நிலங்கள், சேனைப் பயிர்கள் மற்றும் பொதுமக்களின் குடியிருப்புக்களுக்குச் சென்று சேதங்களை ஏற்படுத்துகின்றன.

மேலும்,இந்த விடயம் தொடர்பில்உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு,யானைகளின் வருகையைத் தடுப்பதற்கான வேலிகளை அமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப)

# மாபெரும் சிரமதானம்



களுவாஞ்சிக்குடி மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மாபெரும் சிரமதான பணியொன்று களுவாஞ்சிக்குடி கடற்கரை பிரதேசத்தில் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சிரமதானப் பணி மண்முனை தென் எருவில் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் மற்றும் கடலோர சூழல் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் இணைவில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேச சபையின் செயலாளர் ந.லக்ஷ்மிகாந்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இச் சிரமதானப் பணியின்போது கடலோரத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டன.

சேகரிக்கப்பட்ட சில கழிவுகள் சேதனப் பசளை தயாரிப்பதற்காக கழிவு முகா மைத்துவ பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் மற்றும் சில கழிவுகள் உடன் எரியூட்டப்பட்டன. இது தொடர்பில் பிரதேச சபை செயலாளர் கருத்து தெரிவிக்கையில் -

இவ்வாறான பணிகளில் அர்ப்பணிப்புடன் மக்கள் பங்கு பற்றுகின்றமை மிகவும் அரிதாகக் காணப்படுகின்ற காலகட்டத்தில் மக்கள் அனைவரும் இச்சிரமதானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பிரபாகரனின் பிறந்த தினத்தையொட்டி மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 63ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 100 மாவீரர் குடும்பப் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கன்னங்குடா கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. கட்சியின் வவுணதீவுப் பிரதேசப் பொறுப்பாளர் ஆர்.விநோத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் மட்டக்களப்பு இணைப்பாளர்தர்மலிங்கம் சுரேஷ் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, 100 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டமையுடன், அவர்களுக்கான ஆடை அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ.சு.க. தனித்துப் போட்டியிடும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, நவ. 28

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

காலி அபராதுவ நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய ரயில் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவதனால் நல்லாட்சி அரசாங்கத்தை முன்னெடுத்து செல்வதில் எந்தவித சிக்கல்களும் ஏற்படமாட்டா.

நல்லாட்சி அரசியல் கலாசாரம் ஒன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களுக்கு மிகவும் பொருத்தமானவர்களை பொது மக்கள் தேர்வு செய்வர். மக்களின் ஜனநாயக உரிமைக்கு முன்னுரிமை அளித்து அதனைப் பாதுகாக்கும் வகையில் அமைதியான தேர்தல் ஒன்றை நடத்த எதிர் பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.கட்சியின் விசேட கூட்டம்

## ரணில் தலைமையில்

கொழும்பு, நவ. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.



கட்சியின் தலைவரும் நாட்டின் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது உள்ளூராட்சிமன்ற தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன என கூறப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போதும் கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தொழில்நுட்ப நிறுவன கட்டுமானப் பணி ஆரம்பம்

கொழும்பு, நவ. 28

நாவலப்பிட்டி - ஹயின்போட் என்ற இடத்தில் பல்லின தொழில்நுட்ப நிறுவனத்திற்கான கட்டுமானப் பணிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இதற்காக 50 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு என்.வி.கியு தரத்திலான 3 வருட கால கற்கைநெறி மேற்கொள்ளப்பட உள்ளது.

மத்திய மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இந்த நிலையத்தில் கற்கைநெறிகளைத் தொடர முடியும்.

இதற்கான கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணியில் முழுமையான கற்கை நெறியை தொடர்வதற்காக தங்குமிட வசதிகளும் அமைக்கப்பட உள்ளன.






# ஜனாதிபதி தலைமையில் ‘விஜயாபிமானி’ விழா

கொழும்பு, நவ. 28

வடமேல் மாகாண தொழில் முயற்சியாளர்களை பாராட்டும் ‘விஜயாபிமானி’ பாராட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்றது.

குருநாகலையில் உள்ள மாகாண சபை கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடமேல் மாகாண பொருளாதாரத்திற்கு நேரடிப் பங்களிப்புகளை வழங்கும் தொழில் முயற்சியாளர்களை பாராட்டி அவர்களை ஊக்கு விக்கும் நோக்குடன் வடமேல் மாகாண சபையின் வழிகாட்டலில் வடமேல் மாகாண விவசாய சேவைகள் பணியகம் இந்த விருது விழவை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான எஸ்.பி. நாவின்ன, ரிஷாத் பதியுதீன், பிரதி அமைச்சர் தாரானாத் பஸ்நாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் அமராபியசீலி ரத்னாயக்க, முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

# கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால் தென்னிலங்கையில் பெரும் மக்கள் போராட்டம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்தால் தென்னிலங்கையில் பெரும் மக்கள் போராட்டம் நடத்த பொது எதிரணி தீர்மானித்துள்ளது. இரகசிய சந்திப்புகள், மக்கள் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்ய அரசு தீர்மானித்துள்ளது எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தநிலையில், கோட்டாபய ஆதரவு அமைப்புகள், அரசியல் கட்சிகள், பொது எதிரணி ஆகிய இணைந்து மறைமுக சந்திப்புகளையும், பல்வேறு ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்தால் அடுத்ததாக தாம் எடுக்கும் நகர்வுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த சனிக் கிழமை இரவு கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் பொது எதிரணியினர் விசேட சந்திப்பொன்றை முன்னெடுத்தனர்.

இந்தச் சந்திப்பின்போது சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக தென்னிலங்கையில் மக்கள் கூட்டங்களை ஒன்றிணைத்து பெரிய அளவில் போராட்டங்களை நடத்தவும், கொழும்பிலும் வேறு சில பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பொது எதிரணியின் உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இது குறித்து தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவரது சகாக்களுக்கும் எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அவை குறித்து நாம் மக்களிடம் உண்மைகளை வெளிப்படுத்தி வருகிறோம்.

இந்த நிலையிலேயே இன்று எமக்கு எதிராக இவ்வாறான பழிவாங்கல் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனக்கு எதிராகவும் சில குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டு என்னையும் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல் இந்த நாட்டை காப்பாற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும் கைது செய்ய பெரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவரை கைது செய்தால் இந்த நாட்டில் தென்னிலங்கையில் குழப்பங்கள் ஏற்படும். அவ்வாறான நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற காரணிகளை ஆழமாக கலந்துரையாடினோம். அவரை கைதுசெய்வது உறுதியாக தெரிய வந்தால் அதற்கு எதிராக நாட்டின் சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

எனவே, மக்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். தெற்கின் பலம் என்னவென்பதை இந்த அரசு விளங்கிக்கொள்ள வேண்டும். அதற்கான சரியான வாய்ப்புக்காக நாம் காத்திருக்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் இந்த நாட்டை நேசித்த, இந்த நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நபர்களை தண்டிக்க ஒருபோதும் மக்கள் இடமளிக்கப்போவதில்லை.

ஆகவே, இந்த விடயங்கள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மைத்திரி தென்கொரியாவுக்கு விஜயம்!

கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசுமுறைப் பயணமாக நேற்று தென் கொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சியோலுக்குப் பயணமாகியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியை நாளை 29 ஆம் திகதி தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜா-இன் சந்தித்து இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, பொருளாதார ஒத்துழைப்பு, பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம், கலாசார ஒத்துழைப்பு, உடன்பாடுகளும், முதலீட்டு ஒத்துழைப்பு, பணியாளர் அனுமதி முறை தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படவுள்ளன.

எதிர்வரும் நாளை மறுதினம் தென்கொரிய பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பவுள்ளார்.

## தினசரி ராசி பலன் 28.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.* நவமித்திதி பகல் 11.24 வரை பின்னர் தசமி.

*நட்சத்திரம் - பூரட்டாதி மாலை 5.21 வரை பின்னர் உத்தரட்டாதி.*

*மரணயோகம் மாலை 2.57மணி முதல் 4.18 மணி வரை.*

**ராகுகாலம்** - *மாலை 2.51 மணி முதல் 4.18 மணிவரை.*

**சுபநேரம்** - *பகல் 10.48 மணிமுதல் 12.19 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத வளர்பிறை தசமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூரட்டாதி.*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சுமாராக இருக்கும். தாய் தந்தையரின் நலமும் குடும்பத்தின் சுகமும் அற்புதமாக இருக்கும். சிலருக்கு மங்கல காரியங்கள் மனதிற்கு இதமாக நடந்தேறும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். எந்த விடயங்களிலும் திட்டமிட்டு செயற்பட வேண்டும். பிள்ளைகளால் கூடுதல் செலவுகள் உண்டாகும்.

**மிதுனம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் நற்காரியங்கள் நடக்கும் தொழிலாளர் களுக்கு வெளிநாட்டு ஒப்பந்தங்கள் உயர்வுக்கு காரணமாகும்.

**கடகம்:** தீமையான நாள். வருமானம் குறையும் குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். எதிர்பார்த்தபடி எந்த விடயமும் அமையாதது மன வருத்தத்தை உண்டாக்கும்.

**சிம்மம்:** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. செய்யும் தொழிலில் கவனம் தேவை. தேகசுகம், குடும்பசுகம் ஓரளவு சீராக இருக்கும்.

**கன்னி:** சுபீட்சமான நாள். பணம் தாராளமாக புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சி நடக்கும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்:** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். உடலில் நோய்கள் நீங்கி சுறுசுறுப்புடன் காணப்படுவார்கள்.

**விருச்சிகம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் சம்பந்தமான அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதாரம் நலிவடையும்.

**தனுசு:** விருத்தியான நாள். வருமானத்தில் வகை வகையான வளர்ச்சி ஏற்படும். வியாபாரிகள் வெளியூர்களில் புதிய கிளைகளை நிறுவுவார்கள். புதிய வீடுகள் வாகனங்கள் சிலர் வாங்குவார்கள்.

**மகரம்:** யோகமான நாள். பணம் சரளமாக புழங்கும். புதிய முயற்சிகள் முன்னேற்றத்துக்கு வழிகாட்டும். பெண்களுக்கு எதிர்பார்த்த வரன்கள் அமைய பெறும்.

**கும்பம்:** கீர்த்தியான நாள். எடுக்கும் முயற்சிகள் எல்லாம் பொருளாதாரஏற்றத்திற்கு வழிகாட்டும். வகையில் அமையும். சில காரியங்கள் மனதுக்கு பிடித்தமானதாக அமையும்.

**மீனம்:** துயரமான நாள் தனவரவு குறையும். குடும்பத்தால் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். உடலில் ரோகங்கள் உண்டாகும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**சந்திராட்டமநாள்:** புனர்பூசம் 4ஆம் பாதம் ,பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந் தோர் இன்று நற்காரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# துமிந்தவின் மனு விசாரணைக்கு!



கொழும்பு, நவ. 28

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 5 பேர்தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் இந்த மனுவை நேற்று ஆராய்ந்த போதே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதுடன், இதனடிப்படையில் மனு மீதான விசாரணை எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கிற்கு 5 வருடங்களுக்குப் பிறகு கடந்த வருடம் (2016) செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி இறுதி தீர்ப்பு வெளியாகியிருந்தது.

இதன்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட ஐவருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து துமிந்த சில்வா உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகள் ஜிந்தோட்டைக்கு சனியன்று விஜயம்

கொழும்பு, நவ. 28

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகள் ஜிந்தோட்டைக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய நிறைவேற்றுக் குழுவினருடன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் எம்.எம். அமீன் தலைமையில் கடந்த சனியன்று முஸ்லிம்கவுன்ஸில்பிரதிநிதிகள்ஜிந்தோட்டையில்கள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

ஜிந்தோட்டை அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்துடனான கலந்துரையாடலில் பாதிக்கப்பட்டோர் விவரம், நட்டஈட்டை பெறுவதற்கான வழிகள், சட்ட ஆலோசனைகள் குறித்த விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தலைமையில் சட்டத்தரணிகள் குழுவொன்றையும் ஜிந்தோட்டைக்கு அனுப்பி இலவசசட்டஆலோசனைவழங்குவதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் கவுன்ஸில் மேற்கொண்டுள்ளது.

முஸ்லிம் கவுன்ஸில் சேதங்கள் மற்றும் நட்டஈடு பெறுவது தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவை தெளிவுபடுத்தவுள்ளதோடு, முஸ்லிம்களால் 10 வீடுகள் அளவிலேயே தேப்படுத்தப்பட்டுள்ள உண்மையையும் தெரிவிக்கவுள்ளது.

ஏற்கனவே, முஸ்லிம்கள் 37 வீடுகளுக்கு சேதம் விளைவித்ததுனர் என அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் கவுன்ஸிலின் பிரதித் தலைவர் ஹில்மி அஹமத் மற்றும் செயற்குழு உறுப்பினர் அக்ரம் முக்தார் ஆகியோரும் இவ் விஜயத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

ஜிந்தோட்டை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடனான கலந்துரையாடலில் எம்.கே.எம்.ரஸ்மி, மௌலவி ஜே.எம். ஹிபஷி, ஷெய்க் பாஸி, எம்.ஆர்.எம்.ஸரூக், எம்.ஜே.எம்.சுஹைல், எம்.என்.எம்.ரமீஸ் மற்றும் ஏ.ஆர் பகுர்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



புதுவெளி, சிலாவத்துறை, மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட அஷ்ஷெய்ஹ் கலீல் முகம்மது நஜீம் காசிமி கடந்த *14.11.2017* ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மன்னார் மாவட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மாவட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தராகக் கடமையாற்றும் இவர் வட மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் சேவையாற்றியமையுடன் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்க ளூடனும் பணி புரிந்துள்ளார்.

மேலும் இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் விசேட துறை சிறப்பு கலைப் பட்டதாரியான இவர், சமூக குற்றவியல் ஆய்வாளராக வும் செயற்பட்டு வருகின்றார். (இ-112)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை- **வவுனியாபிரதேசத்தில்** தவசிகுளம் கிராமம், மதவு வைத்தகுளம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார். (இ)



# யாழ். மறை மாவட்ட ஆயரின் இறைபணியின் இரண்டாம் ஆண்டு

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
(ஊடக வருகை விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்)

யாழ் மறைமாவட்ட ஆயரானமேதகுகலாநிதியஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆயர்த்துவதிருநிலைப் படுத்தல் சடங்கு 28 நவம்பர் 2015 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற இரண்டாவது ஆண்டு இன்றையதினம்நிறைவுறும்வேளைகாலைக் கதிர் பத்திரிகை அன்பு நெஞ்சங்கள் சார்பாக இறையாசீர்மிக்க வாழ்த்துக்களை முதலில் தெரிவிப்போம்.

**தமிழ் மக்களின் நியாயமான எதிர் பார்ப்புக்களுக்கு ஏற்ற நிரந்தர தீர்வை அரசமைப்பு உறுதிப்படுத்த செயற்படல்**

இன்று தமிழ் மக்களின் எதிர்பார்ப் புக்களுக்கு ஏற்ற நிரந்தர தீர்வை அரசமைப்பு உறுதிப்படுத்தி பெற காலம் என்றுமில்லாதவாறு கனிந்திருக்கும் வேளை அத்தீர்வை அடைய இராஜதந் திர ரீதியாக இரகசியமாகவும் அமைதி யாகவும் பங்காற்றி வருகிறார். மேலும் அண்மையில் முதலமைச்சர் சார்பாக பிரச்சினை ஏற்பட்டபோது இவர் நல்லை ஆதீனத்துடன் இணைந்து ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் விடுக்கும் அறிக்கை கள் துணிவானவையாகவும் தெளி வானவையாகவும் உள்ளன. இறந்த வர்களை உயிர்ப்பிக்க முடியாது. அதே வேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள் போன்ற அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

**இலங்கையின் ஏனைய மறை மாவட்டங்களுடனான தொடர்பு**

யாழ் மறைமாவட்ட அருட்சகோதரர் களை களுத்துறை குருமடத்திற்கு ஒரு வருடப்பயிற்சிக்காக அனுப்பி வைக்கும் செயற்பாடு மீண்டும் தமிழ் சிங்கள குரு மாணவர்கள் மற்றும் குருக்களிடையே உறவையும் புரிந்துணர்வையும் ஏற்ப டுத்தி தமிழ் அருட்சகோதரர்களுக்கு ஒரு பன்முக பயிற்சியையும் ஆளுமையை யும் வழங்கும் நோக்கமாகும். 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தோடு யாழ் மறைமாவட்ட தமிழ் அருட்சகோதரர்கள் கண்டி அம்பிற்றிய தேசிய குருமடத்தை விட்டு வெளியேறி கொழும்புத்துறையில் தம் பயிற்சிகளைப் பெறத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஏனைய மறைமா வட்டங்களின் ஆயர்களை யாழ் மறைமா வட்டத்திற்கு அழைக்கும் யாழ் ஆயரின் முயற்சி தமிழ் சிங்கள கத்தோலிக்க உறவை கட்டி எழுப்பும் ஒரு முயற்சியா கும். கொழும்பு உயர் மறைமாவட்ட பேரா யர்மல்கம் கருதினால்ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோரின் யாழ் மறைமாவட்டத் திற்கான வருகை இதையே வெளிப்படுத் துகின்றது. யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகையின் இந்த அணுகுமுறையை இனங்கண்ட இலங்கையின் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் இவரை தமது மறைமாவட்டங்களுக்கும் அழைக்கத் தொடங்கியுள்ளனர். இதன் முதற் செயற் பாடாகவே யாழ் ஆயர் காலி மறை மாவட்ட மாத்தறை அன்னை யாத்தி ரைத் தலத்திற்கு அழைக்கப்பட்டார். மாத்தறை அன்னை யாத்திரைத்தலத்திற்கு அழைக்கப்பட்ட முதல் தமிழ் ஆயர் இவர் என்ற பெயரைப் பெற்றுள்ளார் என்பது இங்கு பெருமை யுடன் பதியப்பட வேண் டிய விடயமாகும்.

இலங்கை கத்தோ லிக்க ஆயர் பேரவை யில் இளையோர் ஆணைக்குழுவிற்கு தலைவராகவும் நிதி பொது நிலையினர் மற்றும் நீதி சமாதானம் மனித முன்னேற் றம் ஆகியவற்றிற்கு உப தலைவராக வும் இவர் நியமிக்கப்பட்டுள்ளமையாலும் இலங்கையின் ஏனைய மறை மாவட் டங்களுடனான தொடர்பு மேலும் வளர வாய்ப்புக்கள் உண்டு.

**வெளிநாடுகளில் மதபேதமின்றி தமிழ் மண்ணிற்கும் தமிழ் மக்களுக்கும் உதவும்படி அழைப்பு**

வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் மதபேதமின்றி தமிழ் மண் ணிற்கும் தமிழ் மக்களுக்கும் உதவும்படி தமிழ் மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துக்கொண்டே வருகிறார். பெல்ஜி யம் நாட்டில் யாழ்ப்பாணத்தில் தொழிற் சாலைகளை நிறுவ முன்வாருங்கள் என பகிரங்கமாக விடுத்த அமைப்பை இங்கு குறிப்படலாம்.

புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தி யில் ஐரோப்பாவிலும் அமெரிக்கா கனடா போன்ற நாடுகளிலும் செயற்படும் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள் யாழ் மறை மாவட்டத்தின் செயற்பாடு களுக்கு பங்களிப்பு செய்ய வேண்டு மென வேண்டியுள்ளார்.

திருச்சிலுவைக் கன்னியரின் பரா மரிப்பில் கொழும்புத்துறை கடற்கரை வீதியில் உள்ள புனித யோசப் முதியோர் இல்லம் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் உதவியுடன் முதியோருக்குத் தேவையான வசதி யான இல்லம் அமைக்க அத்திவாரமி டப்பட்டுள்ளது.

**இன்றைய நாளில் இறையாசீர்மிக்க வாழ்த்துக்கள்**

**ஆண்டகை நிறையவே விதைத்துள்ளார்; அனுபவிப்பதற்கு சில காலம் தேவை!**

**புதிய மறைமாவட்ட பணிகள் உருவாக்கம்**

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற கொழும்பு அக்குயனாஸ் கல்லூரியோடு இணைந்து திருமறைக் கலாமன்றத்தில் ஆங்கிலப் பாட டிப்ளோமா பாடநெறியை ஆரம் பிப்பதற்கும் அகவொளி நிறுவனத் தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப் படுத்தல்துறை விஞ்ஞான பட்டமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ள முன்னெ டுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

★மொன்பேட் சபை அருள் சகோத ரர்களின் நெறிப்படுத்தலில் அல்லைப் பிட்டியில் சர்வதேச பாடசாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

★யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி யில் தொழில்நுட்பக் கல்வியை அபிவி ருத்தி செய்ய இரண்டு மாடிக்கட்டட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அமைக் கும் முயற்சி நிறைவடையும் நிலையில் உள்ளது.

★முல்லைத்தீவு சிலாவத்தையில் கப்பூச்சியன் சபைக் குருக்களின் தொழில்நுட்ப கல்லூரி அமைக்கப்பட வுள்ளது.

★ பிரான்ஸ் லியோன் நகர் புனித யோசவ் சபை அருட்சகோதரிகள் மணற் காடு மற்றும் அல்லைப்பிட்டி பங்குகளில் பணியாற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

★ யாழ் மறைமாவட்ட நிதிவளத்தை உள்ளூரில் இருந்தும் பெற்றுக்கொள்ள மறைமாவட்டத்தின் நிதி மூலங்களில் ஒன்றாக விளங்கிய தென்னந் தோட் டங்களை கத்தோலிக்க நிதி நிறுவனங் களின்; உதவியோடு அபிவிருத்தி செய்ய பொறுப்பாக ஒரு குருவை நியமித்துள் ளார். மேற்படி விடயத்தில் அறிவும் அனு பவமும் பின்புலமும் உள்ள ஹிக்றோசான் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ புனித யோசப்வாஸ் அடிகளாரின் யாழ் மறைமாவட்ட திருத்தலத்தை இலங்கை திருச்சபை வரலாற்றில் சின்ன உறோமை என அழைக்கப்பட்டு அவ ருக்கு பாதுகாப்பு வழங்கிய சில்லாலை பங்கில் அமைக்க பணிகள் ஆரம்பமாகி யுள்ளன.

★பருத்தித்துறை தும்பளை லூர்து அன்னை திருத்தலத்தில் நற்கருணைச் சிற்றாலயம் அமைப்பதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★புனித யோசவ்வாஸ் இறையியற் கல்லூரியின் பணிகளை மேலும் மேம் படுத்தவும் அங்கீகரிக்கப்பட்ட பட்டங் களை வழங்கவும் எம்.வி.இ.இரவிச்சந் திரன் அடிகளார் அதிபாரக நியமிக்கப்பட்டு தனிக்கட்டடம் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய மறைக்கோட்டங்கள் மற்றும் பங்குகளின் உருவாக்கம்**

போர்க்காலத்தில் துண்டிக்கப்பட்டு தனியாகவும் தொடர்புகளை ஏற்படுத்த வும் முடியாமல் இருந்த கிளி முல்லை மறைக் கோட்டம், கிளிநொச்சி மறைக் கோட்டம், முல்லைத்தீவு மறைக்கோட்டம் என இரண்டு மறைக்கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பணி இலகுவாக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு மேற் கொள்ளப்பட்டுள் ளது.

முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் சுதந்திரபுரம், உடையார்கட்டு மற்றும் யாழ் மறைக்கோட்டத்தில் மணியம்தோட்டம் கட்டைக்காடு போன்ற புதிய பங்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணி மாநாடு மற்றும் திட்டங்கள்**

2106ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை யாழ் மறைமாவட்டத் தின் முக்கிய பணியாக மேய்ப் புப்பணி மாநாடு நடைபெற்றுள்ளது.

யாழ் மறைமாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு இளைஞர் ஆண்டாக பிர கடனப்படுத்தப்பட்டு இறை திட்டம் தேடும் இளையோர் பயணம் என்ற கருப்பொருள் தெரியப்பட்டு வட பகுதி இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்தவும் பலத்த விமர் சனங்களுக்கு மத்தியில் அவர்களை நெறிப்படுத்தவும் வழி சமைக்கப்பட்டுள் ளது. சமூக ஊடகங்களிலேயே மூழ்கி இருக்கும் இளைஞர்களுக்கு உரிய நெறிப்படுத்தல் வழங்க ஊடக அறிவும் அனுபவமும் பெற்ற அன்ரன் ஸ்ரீபன் அடி களார்சமூகத்தொடர்பு ஆணைக் குழுவிற்கும் இளையோர் ஆணைக்குழுவுக்கும் பொறுப் பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

**யாழ் மறைமாவட்ட குருக்களின் பணி வாழ்வை மேம்படுத்தல்**

பூநகரி, பாசையூர், கூழாமுறிப்புப் பங்குகளில் புதிய பங்கு பணிமனைகள் கட்டப்பட்டுள்ளன.

யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றி இளைப்பாறும் ஆயர்கள் குருக்கள் தாம் இளைப்பாறும் இறுதிக்காலத்தை மகிழ் வோடும் மனநிறைவோடும் செலவு செய்ய நல்லாயன் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள இளைப்பாறும் ஆயர்கள் குருக்களின் இல்லமான எமிலியானூஸ் இல்லத் தின் பணிகள் மேம்படுத்தப்பட்டு அதன் பணிகளை விசேடமாகக் கவனிக்க பொறுப்பான தனியான குருவாக ஜெய சீலன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

போரினால் முற்றாகச் சேதமடைந்த வளலாயில் உள்ள குருக்கள் மற்றும் குருமட மாணவர்களின் விடுமுறை இல்லமும் சிற்றாலயமும் கடற்படை யினரின் துணையோடு புதிதாக அழகுற கட்டி அமைக்கப்பட்டுள்ளது. ஆயர் யஸ்ரின் இல்லம் என அவ்வில்லத் திற்கு பெயரிட்டுள்ளனர்.

யாழ் ஆயரால் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைவாக கடற்படையினரால் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நீர் சுத்தி கரிப்பு இயந்திரத் தொகுதி ஆயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மரியன்னை வழி இயேசுவிடம் என்ற விருதுவாக்குடன் தம் பணியை ஆரம் பித்த ஆயர் நிறையவே விதைத்துள்ளார். அறுவடையை அனுபவிக்க சில காலம் தேவை. ★

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா






**ஐரோப்பிய ஊடகங்களும், ஸ்பானிய அரசும் மற்றும் East Stratcom மாட்ரிட்டின் கொள்கைகள் மீதும் அவற்றுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவின் மீதும் எழுகின்ற விமர்சனங்களை போலிச் செய்திகள் என்று கண்டனம் செய்வதற்காக ஒரு பிரசாரத்தை தொடக்குகின்றன என்பதும் எதிர்பார்க்கத் தக்கதே. அண்மையில், பிரிட்டிஷ் கார்டியன் தெரிவித்தது: புருசெல்ஸில் இருக்கின்ற East Stratcom நடவடிக்கைப் படையில் வேலைபார்க்கின்ற அதிகாரிகள், கட்டலோன் கருத்துவாக்கெடுப்பு தொடர்பான செய்திகளில் ஊடக ஆர்வம் வெடிப்புடன் இருந்ததை அடியொற்றி, அது தொடர்பான போலிச் செய்திகளில் ஒரு அதிகரிப்பை அவர்கள் கண்டதாகக் கூறுகின்றனர்.**

கட்டலோனியாவின் அரசியல் நெருக்கடி குறித்த கிரெம்ளின் ஆதரவு பொய்ச்செய்திகள் மற்றும் தவறான கூற்றுக்களில் அதிகரிப்பு இருந்ததாக கூறப்படுவதை எடுத்துக் காட்டுவதற்காக, மால்டோவா அரசியல்வாதியான போக்டான் டிர்டா போட்டிருந்த ஒரு முகநூல் பதிவை கார்டியன் மேற்கோளிட்டது: கட்டலோனியாவில் வன்முறையை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் ஆதரித்தனர்.

உக்ரேனில் போலவே, இத்தகைய கூற்றுகளை போலிச் செய்திகள் என்றும் ரஷ்ய பிரசாரம் என்றும் கூறி ஆளும் உயரடுக்கு தாக்குகிறது என் றால், அதற்குக் காரணம் அவை பொய்ச் செய்திகள் என்பதால் அல்ல. மாறாக அவை சொந்த நாட்டில் அரசியல் எதிர்ப்பைத் தூண்ட அச்சுறுத்துகிற காரணத்தாலேயே ஆகும்.

ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் இருக்கும் அதன் கூட்டாளிகள். கட்டலோன் நெருக்கடியைத் தூண்டின அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது சேறுவீசுவதற்கு அதனைப் பயன்படுத்தின என்பதான கூற்றுகள் மாட்ரிட்டின் சொந்த அறிக்கைகளாலேயே மறுக்கப்பட்டிருக்கக் கூடிய பொய்களாகும்.







ஒக்ரோபர் முதலாம் திகதி கருத்துவாக்கெடுப்புக்கு ஒரு வாரத்துக்குப் பின்னர், மாட்ரிட் அதன் உள்நாட்டு ஒடுக்குமுறைக்கு மாஸ்கோ வழங்கிய பிற்போக்குத்தனமான ஆதரவுக்கு புகழாரம் சூட்டியது. ரஷ்யாவுக்கான ஸ்பெயினின் தூதரான இக்னாசியோ இபானேஸ் ரூபியோ கூறினார்: ரஷ்யாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை ஸ்பெயின் வழிமொழிகிறது. இது எங்கள் நாட்டின் ஓர் உள் விவகாரம் என்பதை மிக ஆரம்பத்தில் இருந்தே, ரஷ்யா அங்கீகரித்திருக்கிறது... ஆகவே கட்டலோனியாவின் நெருக்கடி தொடர்பில் ரஷ்யாவின் நிலைப்பாடு குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சி கொள்கிறோம்.

**ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் இருக்கும் அதன் கூட்டாளிகள். கட்டலோன் நெருக்கடியைத் தூண்டின அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது சேறுவீசுவதற்கு அதனைப் பயன்படுத்தின என்பதான கூற்றுகள் மாட்ரிட்டின் சொந்த அறிக்கைகளாலேயே மறுக்கப்பட்டிருக்கக் கூடிய பொய்களாகும்.**

ஐரோப்பாவில் பொலிஸ்-அரசு ஆட்சியை நோக்கி துரிதப்பட்டுச் செல்லும் நடவடிக்கைகளும், ரஷ்ய பொய்ச் செய்திகளுக்கு எதிரான ஊடகப் பிரசாரமும் உலக சோசலிச வலைத் தளத்தின் செய்திகள். ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதன் எதிர்ப்பு.

அதனைத்தணிக்கைசெய்வதற்கு கூகுள் முயலுவதற்கு எதிரான அதன் போராட்டம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மீண்டும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஐரோப்பாவில் எதேச்சாதிகார ஆட்சியையும் அதி-வலது அரசியலையும் அங்கீகரிப்புக்குரியதாக ஆக்க முனைவதற்கு எதிரான தலைமைக் குரலாக அது எழுந்து கொண்டிருக்கிறது.




(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 19

### காரைக்குடி கம்பன் விழாவில் முதன்முதலாக... 18.03.1981

**காரைக்குடியில் என் முதல் பேச்சு**

மேடையில் நான் பேசியபோது, ‘‘சபரியாய் மாறுவதன் முன்பு, ஜெயராஜாய் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.’’ என்று கூறி என் பேச்சை தொடங்கினேன். ‘‘இலங்கையிலிருந்து வருகிறவர்கள், இங்கிருந்து காஞ்சிபுரம் பட்டு முதலிய வற்றை, எடுத்துச் செல்ல விரும்பித் தான் வருவார்கள். நான் அதை விரும்பி வரவில்லை. வேறு இரண்டு பொருள்களை விரும்பி வந்திருக்கிறேன். அப்பொருள்களுக்கு உரியவர்கள் இச்சபையில் இருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து அப்பொருள்களை வாங்கித் தருவது, இச்சபையினரின் பொறுப்பு’’என்றேன். அந்த அறிவுச் சபை, அவை என்ன பொருட்கள்? என்பதுபோல், என்னை ஆச்சரியமாய்ப் பார்த்தது. கம்பன் அடிப்பொடியினதும், என் குருநாதரதும் திருவடிகள் தான் அவை என்று, நான் சொன்னதும் கற்றோர் பலர் சிலிர்த்து கண் கலங்கினர்.

‘‘நல்லா கதைச்சேப்பா’’

இலங்கையரான நாம் தமிழ் நாட்டில் பேசும் போது, ஒரு பிரச்சினையைச் சந்திக்க வேண்டி வரும். இலங்கையரான எங்களுடைய சில தமிழ்சொற்கள், அவர்களுக்குப் புரிவதில்லை. வேறு சில தமிழ்ச் சொற்களுக்கு, நாம் கொள்ளும் அர்த்தம் இன்றி வேறு அர்த்தத்தைக் கொள்வார்கள். அக்காலத்திலேயே மேடையில் அங்கு பேசுகையில், முடிந்த அளவு அவர்கள் தமிழில் பேச நான் முயற்சிப்பேன். ஆனாலும், சில சொற்கள் என்னை, ஈழத் தமிழன் என்று அவர்களுக்குக் காட்டிக் கொடுத்து விடும். இலங்கையில் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதை, நாம் ‘கதைத்தல்’ என்றே சொல்கின்றோம்.


தமிழகத்தில் ‘பேசுதல்’ என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்கள். அங்கு கதைத்தல் என்றால், வீண் பேச்சுப் பேசுதல் என்று அர்த்தமாம். நான் சபரியாய் பேசும்போது, எங்கள் வழக்கத்தில் ‘‘அனுமான் கதைதான்’’ என்று பேசிவிட்டேன். பேசி இறங்கியதும், அறிஞர்கள் பலரும், ‘‘நல்லா கதைச்சேப்பா’’ என்று என்னைக் கிண்டல் பண்ணினார்கள். கடந்த முப்பது ஆண்டுகளாக, தமிழக மேடையில் பேசி வருகின்றேன். இன்றும்கூட அவர்களது உரைநடை வழக்கை, என்னால் முழுமையாய் பின்பற்ற முடியவில்லை. அவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக, அவர்கள் பாணியிலேயே நான் பேசினாலும், என் வாயிலிருந்து தவறிவரும் எங்களின் ஓரிரு வழக்குச் சொற்களை வைத்தே, என்னை ஈழத்துப்பேச்சாளன் எனக் கண்டு பிடித்து விடுகிறார்கள். ‘‘ஏன் நாங்கள் அவர்கள் பாணியில் பேசவேண்டும்? எங்கள் பாணியிலேயே பேசலாமே என சிலர் கேட்பார்கள். கருத்தை மற்றவர்களுக்கு விளங்கச் செய்வதற்காகத் தான் மேடைப் பேச்சு. சொற்களுக்கான பொருள் விளங்காவிட்டால் கருத்து சபையைச் சேராது.

ஆகவே, அங்கு அவர்களுக்கு விளங்கும் தமிழிலேயே பேச முயற்சிப்பதில், தவறென்ன என்று அவர்களைக் கேட்பேன். லண்டன் இங்கிலிஷ், அமெரிக்கன் இங்கிலிஷ் என, ஆங்கிலத்தைப் பல்வேறு விதமாய் பேசுவதில், நம்மவர்கள் பெருமை கொள்கிறார்கள். அதுபோலவே தமிழையும் பல்வேறு பாணியில் பேசத் தெரிந்திருப்பதும் தவறில்லை என்பதே என் கருத்து. அங்ஙனம் பேசியதால்தான் தமிழ் நாட்டு மேடைகளில், நிரந்தரமாய் எனக்கும் ஓரிடம் கிடைத்தது என்று நினைக்கின்றேன்.

**திருவடிகள் பெற்ற படலம்**

விழா முடிந்த அடுத்த நாட்காலை, ஒவ்வொருவராய்க் கம்பன் அடிப்பொடியிடம் விடைபெற்றுக்கொண்டிருந்தனர். ஒரு முனிவரது ஆச்சிரமம் போல, குடில் ஒன்று அமைத்து, கம்பன் அடிப்பொடி அங்கு தங்கியிருந்தார். அவரது குடிலைச் சுற்றி பெரிய அறிஞர் கூட்டம் நின்றது. ஒவ்வொருவராய்க் குடிலில் உட்சென்று, கம்பனின் அடிப்பொடியிடம் விடைபெற்று திரும்பிக்கொண்டிருந்தனர்.

எங்கள் முறை வந்ததும் நானும் குமாரதாசனும் வசந்தனும், உள்ளே சென்று அவர் காலில் விழுந்தோம். நான் அவரின் காலில் இருந்த திருவடிகளைப் பற்றியபடி, ‘‘இவற்றைத் தந்தால் தான் நான் எழும்புவேன்’’ என்றேன். நான் மேடையில் சொன்னதை, ஏதோ சம்பிரதாயத்திற்கு பேசியதாய் நினைந்து, யாரும் ‘‘சீரியசாய்’’ எடுத்துக்கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். கம்பன் அடிப்பொடியும் அப்படித்தான் நினைத்



கழகத்தைக் காவல் செய்யும் குருநாதர்களின் திருவடிகள்

திருப்பார் போல. நான் திருவடிகளை நிஜமாகவே கேட்பேன் என்று, அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

நான் அப்படிக் கேட்டதும் அவருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் கடுங் கோபக்காரர் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். ‘‘சீசீ இது என்ன விளையாட்டு? சீக்கிரம் எழும்பு’’ என்றார். நான் எழும்பவில்லை.

‘‘ஐயா! மகா னான உங்களை நாம் தரிசித்து விட்டோம். எங்களுக்குப் பிறகு வரும் இளைய தலைமுறைக்கு, உங்களைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்குமோ தெரியாது. இத்திருவடிகளைத் தந்தால் அதன்மூலம், அடுத்த தலைமுறையும் உங்களை தொழுது ஆசி பெறும். எனவே நீங்கள் அடித்தாலும் பரவாயில்லை. இத்திருவடிகளைத் தராமல் எழும்ப மாட்டேன்’’ என்றேன். இளமை தந்த பயமின்மை!

அவர் ஒரு நிமிடம் கண்மூடி நின்று விட்டு, கால்களில் இருந்த திருவடிகளைக் கழற்றிப் பின் சென்றார். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர். அந்த இரும்பு மனிதர் அழுவதைக் கண்டு, சுற்றியிருந்த அறிஞர்கள் எல்லாரும் கண்ணீர் விட ஆரம்பித்தனர். எங்களது அச் செயல் அங்குள்ள அத்தனை அறிஞர்களதும் மனதில், எங்களை ஆழப்பதித்தது.

**கம்பன் அடிப்பொடியிடம் கற்றவை**

பின்னர் என் குருநாதர் திருவடியையும் அவர் வீட்டில் பெற்றுக்கொண்டேன். இன்றும் அவ்விருவரின் திருவடிகளும், எங்கள் பூசை அறையை அலங்கரிக்கின்றன. கம்பனில் பற்று, கழகத்தைக் குடும்பமாய் நினைக்கும் இயல்பு. கட்டுப்பாடோடு விழா நடத்தும் முறை, மேடை அலங்காரம், விழாவில் விருந்தோம்பல், நீதியால் வரும் நிமிர்வு என பலவற்றையும் இவ்விழா மூலம் கம்பன் அடிப்பொடி எமக்குக் கற்றுத் தந்தார்.

**குருநாதரின் இல்லத் தொடர்பு**

விழா முடிந்ததும் என் குருநாதரிடம் திருவடிகளைக் கேட்டேன். அவர் ‘‘அதெல்லாம் உனக்கு வேணாம். எங்க ஆத்தில (வீட்டில) இரண்டு திருவடி இருக்கு அதை வந்து வணங்கு!’’ என்று கூறி, எங்களைத் தன்னோடு திருச்சிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ‘சாரதாஸ் ஹோட்டலில்’ எங்களைத் தங்க வைத்தார். மதுரை மாநாட்டுக்குச் சென்றபோது, 7 ரூபா வாடகைக்கு ஒரு அறை எடுத்து அதில் ஏழு பேர் தங்கியிருந்தோம். ‘சாரதாஸ் ஹோட்டலில்’ ஒரு நாள் அறை வாடகை 40 ரூபாய். அப்போது, அது எங்களுக்குப் பெரிய தொகை. முதன் முதல் நாம் இந்தியா சென்ற போது ஒரு சோடி இட்டலி 40 பைசா (சதம்), ஒரு சோடி பூரிக் கிழங்கு 80 பைசா (சதம்) அப்போதைய 40 ரூபாயின் பெறுமதி இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆனால், அன்றிலிருந்து தான், எங்கள் தரத்துக்கேற்ப வாழ வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொண்டோம்.

‘‘ஓய்வெடுங்கப்பா! எம் மகன் வருவான், முதலில் எம் பெயர் சொல்லி, அப்புறமா அவன் பெயர் சொல்லுவான். அவனோடு சேர்ந்து ஆத்துக்கு வந்திடுங்க’’ என்று சொல்லிச் சென்றார் குருநாதர். அன்று தான் முதன் முதலில் குருநாதரின் மகன் மாதுவைச் சந்தித்தேன். இன்று அவன் பெரும் பேச்சாளன். தந்தையின் நற் பண்புகள் எல்லாம் பெற்று இன்று அவன் வாழ்வதைக் கண்டு உளம் மகிழ்கிறேன். மாதுவோடு வீடு சென்றோம். பல நாள் பழகிய உறவாய் அந்த வீடு எங்களை வரவேற்றது. ஐயாவின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அயலவர் என அனைவரும் எங்கள் மேல் அன்பைப் பொழிந்தனர். அன்றிலிருந்து நாங்களும் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளானோம்.

(தொடரும்...)



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இந்த வருடத்திற்கான மாணவர் நாடாளுமன்ற இறுதி அமர்வு அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர்.தி.வரதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரியின் பழைய மாணவரும் வடமாகாண கல்வித் திணைக்கள கணக்காளருமான எஸ்.சிவரூபன் கலந்து சிறப்பித்திருந்தார். (இ)



## மன்னார் மாவட்ட இலக்கிய விழாவில் விருது பெற்றோர்

மன்னார் மாவட்ட செயலகம் மாவட்ட கலாசாரப் பேரவை ஊடாக மாவட்ட கலை இலக்கியப் பெருவிழாவை சனிக்கிழமை (25.11.2017) மன்னார் நகர மண்டபத்தில் மன்னார் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடத்தியது.

அங்கு பதினெட்டு கலைஞர்களுக்கு 'மன்கரபி' என்னும் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டதில் பதினாறு கலைஞர்கள் இவ் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். விருது பெற்றவர்கள் செ.செபமாலை, செ.மாசிலாமணி, எஸ்.ஏ.உதயன், வண.தமிழ்நேசன் அடிகளார், வண.சிவஸ்ரீ மஹாதர்மகுமார குருக்கள், மன்னார் அமுதன், சீ.பத்திநாதன் பர்னாந்து, வீ.சிவபாலன், செ.மாதவன், வை.கஜேந்திரன், ச.ஞானசீலன், செ.சந்தியோகுகுரூஸ், செல்வி வே.சந்திரகலா, திருமதி வி.பராசக்தி, மன்னூரான் ஷஷிஹார், வீ.யோகேஸ்வரன் ஆவார்.' (இ-112)




இவ்வருடம் இடம்பெற்ற 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் - புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய பாடசாலையில் இருந்து 24 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். இந்த மாணவர்களுடன் கல்லூரி முதல்வர், துணை முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருக்கின்றமையைப் படத்தில் காணலாம். அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) ஆசிரியர்களானT.பிரஜாபதி, இ.ராகுலன், B.P.பெரேராபெர்னாண்டோ, அருட்சகோதரர் யோகநாதன் சொய்சா FSC (பிரதிமுதல்வர்), அருட்சகோதரர் S.E.றெஜினோல்ட் FSC (கல்லூரி முதல்வர்), திருமதி.S.பத்திநாதன் (பிரதிமுதல்வர்), செல்வி. S.மெற்றில்டா, திருமதி.N.நுஸ்ஹானா, திருமதி .S.பிறேமிளா. நிற்பவர்கள் 1 ஆம் வரிசை (இடமிருந்து வலமாக) கு.டினுசன்(177 மாவட்ட நிலை 10), R.அக்யன்(174), N.மதுசன் செய்சா(157), J.அகஸ் ரோன் (177 மாவட்ட நிலை 10), M.ஜெனில்(172), A.சயந்தன்(159), L.அனகசான்(167), Q.R.லறிசன்(171), M.R.றிபாத்(178 மாவட்ட நிலை 08), A.N.அபிசேக்(191 மாவட்ட நிலை 01 மாகாண நிலை 03), J.றக்சன்(162), A.R.டினுசிகன்(165) நிற்பவர்கள் பின்வரிசை (இடமிருந்து வலமாக) J.லிசோன்(159), B.லக்சயன்(168), A.மிரோசிதன்(170), M.S.C.பிறலின்சன்(160), R.சயுதன்(179 மாவட்ட நிலை 07), ஸ்ரீ.சாகித்தியன்(173), S.மொறிஸ்ரன்(158), K.சகிலன்(169), S.துவாரகன்(153), B.ஜெரோசன்(155), M.அன்ரூ(156). (இ-112)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 1-30**



# முருங்கை பயிர்ச்செய்கை

பொதுப்பெயர்- முருங்கை
தாவரவியல் பெயர் - moringa oleifera
குடும்பம் - Moringaceae



**முக்கியத்துவம்**

★ வறட்சியை தாங்கி வளரும் பயிர்.

★ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 220 - 240 காய்கள் பெற்றுக் கொள்ளலாம்.

★ இலை,காய் ,பூ என்பன உணவு மற்றும் மருத்துவத் தேவைக்காகப் பயன் படுத்தப்படுகின்றன.

★மருத்துவ முக்கியத்துவம் மிக்கது. நீரிழிவு மற்றும் குருதிச்சோகை நோய்க்கு சிறந்த நிவாரணியாகும்.

★ கல்சியம் முதன்மையாகவும் இரும்பு, மக்னீசியம், பொஸ்பரஸ் என்பன முறையே அதிகளவிலும் காணப்படுகின்றன.

**வர்க்கங்கள்**

➢ PKM -1
➢ PKM -2
➢ உள்ளூர் இனம்

**தேவையான சூழல் காரணிகள்**

✓ வருடாந்த மழைவீழ்ச்சி 250 - 3000 மி.மீ. பரவலான மழை வீழ்ச்சி.

✓ நன்குநீர் வடியும் இருவாட்டி மண் மற்றும் மணல் மண் சிறந்தது.

✓ மண் ph 5-9 ஆக இருத்தல் விரும்பத்தக்கது.

✓ கடல் மட்டத்திலிருந்து 2000 மீற்றர் வரையான பிரதேசம்.



**இனப்பெருக்கமுறை**

✦விதைமற்றும் தண்டுத் துண்டம் மூலம் இனம் பெருக்கமுடியும்.

✦வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு விதை மூலம் இனம்பெருக்கம் செய்தல் இலகுவானது.

✦தண்டுத் துண்டம் எனின் ஒரு மீற்றர் நீளமுடைய 4 செ.மீ. விட்டமுடைய தண்டுத் துண்டங்கள் நடுகைக்கு பொருத்தமானவை.

**நடுகைமுறை**

●சிறுபோக பெரும் போகமழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.

● நடுகை இடைவெளி 8 அடி 8 X 8 அடி.

● இலை உற்பத்திக்காயின் நடுகை இடைவெளி 4அடி X 4 அடி.

● நடுகைக்குழி ஆழம் 1 - 1.5 அடிநீள அகல ஆழத்தில் அமைத்தல் வேண்டும்.

**காற்றில்லாமல் உயிர்களில்லை, கரைகளில்லாமல் நதிகளில்லை, மரங்களில்லாமல் மனிதன் இல்லை.**

● சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப்பப்படவேண்டும்.

**அறுவடை**

★ 8 மாதங்களின் பின் முதலாம் அறுவடையைப் பெற்றுக்கொள்ளலாம்

★ மூன்றாவது வருடத்தில் கூடிய விளைச்சலைப் பெறலாம்.

★ சிறந்த உற்பத்தியைப் பெற வருடாந்தம் அறுவடை முடிவுற்றபின் 3 -4 உயரத்தில்கத்தரித்தல் சிறப்பானது.

★வருடத்தில் இரு தடவை கள் அறுவடையை பெற்றுக் கொள்ளலாம். மார்ச் தொடக்கம் ஏப்ரல் காலப்பகுதி ஜூலை முதல் செப்ரெம்பர்

**ல.கிர்த்திகா**
விவசாயப் போதனாசிரியர்
*(கிளிநொச்சி கிழக்கு)*

---

இலங்கை தமிழரசுக் கட்சியின் அராலி மூலக் கிளை புனரமைப்பு மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் பட்டியல் தயாரிப்பு நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த சனிக்கிழமை மாலை அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எவ். எக்ஸ்.குலநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள் தொடர்பான விளக்கவுரையை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளரும் கட்சியின் யாழ். மாவட்ட கிளையின் தலைவருமான பெ.கனகசபாபதி ஆற்றினார். தொடர்ந்து வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் காங்கேசன்துறை தொகுதியின் செயலாளருமான சோ. சுகிர்தன் உள்ளூராட்சித் தேர்தலில் பட்டியல் தயாரிப்பு முறைகள், நடைமுறைகள் பற்றி தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து அராலி மூலக்கிளையின் தெரிவுகள் இடம்பெற்றன. இதில் தலைவராக தர்மலிங்கம் நடனேந்திரன் (கஜன்), செயலாளராக ம. குகராஜன், பொருளாளராக எஸ்.ஜதிசன், உபதலைவர் ச.ஜயலிங்கம், உபசெயலாளர் நா.இந்திராணி ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக கு.கேதீஸ்வாரி, க.கோபாலசிங்கம், எஸ்.சர்வானந்தா, பொ.மல்லிகானந்தபரமகுலங்கம், எஸ்.பிறேமராணி, ப.சந்திரபவானி ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கான நிர்வாக செயற்பாடுகள் சீராக இல்லாதமையால் வட்டுக்கோட்டை தொகுதிக்கான மூலக்கிளைகள் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத்தால் புனரமைக்கப் பட்டு வருகின்றன. இதேவேளை, வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆறு மூலக்கிளைகள் உள்ள நிலையில் ஏனைய 5 மூலக் கிளைகளுக்கும் நிர்வாகிகளை தெரிவு செய்வதற் கான நடவடிக்கைகளை கட்சியின் உயர்மட்டக் குழு எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(இ)








# இரட்டை இலையின் சக்தியை ஆர்.கே. நகரில் நிரூபிப்போம்


அமைச்சர் ராஜு

மதுரை,நவ.28

இரட்டை இலையை மீட்ட நாம் அதன் சக்தியை ஆர்.கே.நகர் தேர்தலில் நிரூபிக்க வேண்டும் என அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்துள்ளார்.

ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் பணிகள் தொடர்பாக மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் மதுரையில் நடந்தது.

கூட்டத்தில் அமைச்சர் செல்லூர் ராஜூ பேசியவை வருமாறு:-

வரலாற்றுச் சிறப்பு மிக்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் சரித்திர சாதனை படைத்த இரட்டை இலை ச்சின்னம் 2ஆவது முறையாக மீட்கப்பட்டுள்ளது. அரசியல் களத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் இழந்த சின்னங்களை இன்று வரை மீட்க முடியவில்லை. ஆனால் அ.தி.மு.காவின் வெற்றிச் சின்ன இரட்டை இலை மீட்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் ஆசி நமக்கு இருக்கின்றமையால் தான் இந்த வெற்றிச் சரித்திரத்தை நாம் படைத்து இருக்கிறோம்.

45 ஆண்டுகள் அ.தி.மு.க. இயக்கம் மக்கள் பணியாற்றி வருகிறது. 27 ஆண்டுகள் ஆட்சி செய்து சாதனையைப் படைத்துள்ளது. இப்போது நாம் ஆர்.கே. நகர் இடைத்தேர்தலை சந்திக்க இருக்கிறோம். இது குருஷேத்திர போராகும். இரட்டை இலையை மீட்ட நாம் அதன் சக்தியை ஆர்.கே. நகர் தேர்தலில் நிரூபிக்க வேண்டும். நமக்கு ஒரே எதிரி தி.மு.க. தான். எனவே நாம் ஒற்றுமையுடன் தலைவர்களின் இலட்சியங்களைக் காக்க வேண்டும்.

தலைமைக்கழக ஆட்சி மன்றக்குழு யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து வெற்றிக் கனியை அம்மாவின் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும் என அமைச்சர் செல்லூர் ராஜூ பேசினார்.

# இரட்டை இலை தனித்தனி இலையாக ஆகிவிடக்கூடாது


தமிழிசை ஆதங்கம்

சென்னை,நவ.28

அ.தி.மு.க.வின் உட்கட்சிப் பிரச்சினையால் இரட்டை இலையைத் தனித்தனி இலையாக ஆக்கி விடக்கூடாது என்று தமிழக பாரதீய.ஜனதா மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.காவில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் இடையே அதிருப்தி நிலவி வருகின்றது.

இது தொடர்பாக தமிழக பா.ஜனதா மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியவை வருமாறு:-

5 வருடங்களும் அ.தி.மு.க. ஆட்சி நடத்த வேண்டும் என்று தான் மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசாங்கம் 5 வருடங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது தான் எனது விருப்பம்.

ஆனால் கட்சியில் ஏற்படும் குழப்பம் ஆட்சியில் பிரதிபலிக்கும். ஆட்சியில் குழப்பம் இருக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் கருத்துத் தெரிவித்தோம். அ.தி.மு.க.வில் உட்கட்சிப் பிரச்சினை இருந்தாலும் மக்களுக்கு நல்லது நடக்காது என்று நினைக்கத் தோன்றுகிறது. இரட்டை இலையை மீண்டும் பெற்றிருக்கின்றார்கள். இதைத் தொடர்ந்து அவர்களுக்குள் பிரச்சினை ஏற்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. உட்கட்சிப் பிரச்சினையால் இரட்டை இலையைத் தனித்தனி இலையாக ஆக்கி விடக்கூடாது.

திரை உலகத்துறையினர் மட்டும் மாற்றத்தைத் தனிப்பட்ட முறையில் கொண்டுவர முடியாது. மாற்றத்தைக் கொண்டு வர விரும்புகிறவர்கள் பா.ஜனதாவுடன் இணைந்து மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று தெரிவித்துள்ளார்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆர்.கே.நகரில் மனுத் தாக்கல்




ஆர்.கே.நகர் தொகுதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் தண்டையார்பேட்டையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நேற்று ஆரம்பமாகியது.தேர்தல் நடத்தும் அதிகாரியாக ஆதி திராவிடர் நலத்துறை இணை இயக்குநர் கே.வேலுச்சாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

தண்டையார்பேட்டையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் டிசெம்பர் 4ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வேட்புமனுத் தாக்கல் செய்யலாம். தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் டிசெம்பர் 5ஆம்திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மனுக்களை திரும்பப் பெற 7ஆம் திகதி கடைசி நாளாகும். 21ஆம் திகதி வாக்குப்பதிவும், 24ஆம் திகதி வாக்கு எண்ணும் பணிகளும் நடைபெறவுள்ளன.

வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியதைத் தொடர்ந்து மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

இந்த முறை தேர்தலை நியாயமாக நடத்தத் தேர்தல் ஆணையம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே வீடு வீடாகப் பிரசாரம் செய்ய வேண்டும், தெருக்களில் தேர்தல் பணிமனைகள் அமைக்கக் கூடாது, வெளி வாகனங்கள் தொகுதிக்குள் நுழையக் கூடாது எனப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது தவிர தெருக்களிலும் வீடியோ கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

தேர்தல் பணிகளில் துணை இராணுவப் படையினரை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. தேர்தல் விதி மீறல், பணப்பட்டுவாடா தொடர்பான குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்க சென்னை பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் ரவி தலைமையில் கட்டுப்பாட்டு அறை உருவாக்கப்பட்டுள்ளது.

# விஜய் மல்லையாவை மும்பை சிறையில் அடைக்கத் திட்டம்




விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வந்து மும்பை சிறையில் அடைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக இங் கிலாந்து நீதிமன்றில் தெரிவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா , பொதுத்துறை வங்கிகளிடம் இருந்து 9 ஆயிரம் கோடி ரூபா கடன் வாங்கி விட்டு, உரிய வட்டியுடன் திருப்பிச் செலுத்தவில்லை. இந்த நிலையில் அவர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்குத் தப்பி ஓடி விட்டார். அவரை இந்தியாவுக்கு நாடு கடத்தி வந்து, இங்குள்ள வழக்குகளைச் சந்திக்க வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கைதிகளை நாடு கடத்திக் கொண்டு வருவது தொடர்பாக இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே 1992ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருந்தாலும், இதுவரை அதன்கீழ் குஜராத் கலவர வழக்கில் தொடர்புடைய சமீர்பாய் வினுபாய் பட்டேல் என்பவர் மட்டும் தான் இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், விஜய் மல்லையாவை நாடு கடத்திக்கொண்டு வருவது தொடர்பான விசாரணை, லண்டன் வெஸ்ட் மின்ஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஏற்கனவே இவ்விவகாரம் விசாரணைக்கு வந்தபோது, மல்லையா இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இந்திய சிறைகளில் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என்று விஜய் மல்லையா தரப்பினர் குறிப்பிட்டனர். இது தொடர்பாக இந்திய அரசின் பதிலை இங்கிலாந்து நீதிமன்று கோரியுள்ளது.

இது தொடர்பாக, மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு:-

விஜய் மல்லையாவை நாடு கடத்துவது தொடர்பான விசாரணை லண்டன் வெஸ்ட் மின்ஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் வருகின்ற 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது.அப்போது அவரை மும்பை ஆர்தர் ரோட் சிறையில் அடைக்கத் திட்டமிட்டுள்ளதையும், அந்தச் சிறை சர்வதேச தரத்தின் அடிப்படையில் உச்சக்கட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதையும் தெரிவிப்போம்.

தவிரவும், ஆர்தர் ரோட் சிறையில் கைதிகளுக்கு சிகிச்சை அளிக்கப் போதுமான மருத்துவ வசதி உள்ளது. விஜய் மல்லையா விசாரணைக் கைதி என்ற முறையில் முழு பாதுகாப்பு வழங்கப்படும்.

இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டால் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றெல்லாம் விஜய் மல்லையா கூறுகின்றமை வழக்கு விசாரணையில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குத்தான் என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யப் படையின் வான்வெளித் தாக்கு; 15 குழந்தைகள் உட்பட 34 பேர் சாவு!








டமாஸ்கஸ்,நவ.28

சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத முகாம்கள் மீது ரஷ்ய விமானங்கள் நடத்திய வான்வெளித் தாக்குதலில் 15 குழந்தைகள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் 34 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

சிரியாவின் பல்வேறு நகரங்களை ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அந்த நகரங்களை மீட்க சிரிய அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இதற்காக, ரஷ்யா அரசும் சிரிய அரசுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

இந்த நிலையில், சிரியாவின் வடகிழக்கில் உள்ள டெர் எஸ்ஸர் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாத முகாம்கள் மற்றும் நிலைகள் மீதும் ரஷ்யாவின் விமானப்படையினர் நேற்று முன்தினம் வான்வெளி தாக்குதல் நடத்தினர்.

தீவிரவாதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 34 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 15 குழந்தைகளும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## ஒபாமா மகளின் முத்த விவகாரம்: ட்ரம்ப் மகள் இவாங்கா ஆதரவு

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவின் மகள் மலியா, ஆண் நண்பருக்கு முத்தமிடும் வீடியோ காட்சி வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் மலியாவுக்கு ட்ரம்ப்பின் மகள் இவாங்கா ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா மகள் மலியா. இவர் கல்லூரியில் படித்து வருகிறார். சமீபத்தில் இவர் தனது ஆண நண்பரும், விளையாட்டு வீரருமான ரோரி என்பவருக்குப் பொது இடத்தில் வைத்து முத்தமிடும் வீடியோக் காட்சி வெளியானது. இது அமெரிக்கா முழுவதும் வைரல் ஆனது.

இதை அமெரிக்க ஊடகங்கள் பெரிதுபடுத்திப் பல்வேறு விதமாகச் சித்திரித்துச் செய்தி வெளியிட்டன. முன்னாள் அதிபரின் மகள் பொது இடத்தில் இப்படியா நடந்து கொள்வது? ஒபாமாவின் மகளா இப்படி? போன்ற தலைப்புகளில் செய்திகள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த விடயத்தில் ஒபாமாவின் மகள் மலியாவுக்கு தற்போதைய அதிபரின் மகள் ஆதரவு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மகள், இவாங்கா மலியாவுக்கு ஆதரவாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில், மலியாவுக்கும், இளைஞர்களுக்குமான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இதைப் பெரிய தவறாகச் சித்தரிப்பது சரியான விடயமாகத் தெரியவில்லை. ஊடகங்கள் தங்கள் கருத்தை திருத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## சீனாவில் வெடி விபத்தில் 2 பேர் சாவு; 30 பேர் காயம்



சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள செஜியாங் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த சக்தி வாய்ந்த வெடி விபத்தில் இருவர் பலியாகினர். 30 பேர்காயமடைந்தனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள செஜியாங் மாகாணத்தில் நிங்போ என்ற துறைமுக நகரம் அமைந்துள்ளது. இந்த நகரின் வீதியோரம் உள்ள ஒரு கட்டடத்தை இடிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், அந்தக் கட்டடத்தில் பயங்கரமான வெடி விபத்து ஏற்பட்டது. கட்டடத்தை இடிப்பதற்காக அங்கு சேமித்து வைத்திருந்த வெடி பொருள்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறியதால் ஏற்பட்ட இந்த விபத்தில் அருகில் உள்ள வீடுகளும் வணிக நிறுவனங்களும் கடுமையாகச் சேதமடைந்தன.

பல வீடுகளின் மேற்கூரைகள் இடிந்து விழுந்தன. சம்பவ இடத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திலிருந்த கட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின.

இந்த விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர் எனவும் சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் முதல்கட்டத் தகவல் வெளியாகியுள்ளது. படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றுவரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

## ஆகங் எரிமலை உயிர்ப்பால் விமான சேவைகள் ரத்து

ஜகார்த்தா,நவ.28

இந்தோனேஷியாவின் பாலித் தீவில் 50 ஆண்டுக்குப் பிறகு வெடித்த ஆகங் எரிமலையால் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்தோனேசியா தீவுக் கூட்டங்கள் அடங்கிய நாடு. இங்கு பல தீவுகளில் எரிமலைகள் உள்ளன. பாலித் தீவில் 'ஆகங்' என்ற எரிமலை உள்ளது.


இந்த எரிமலை கடந்த 22ஆம் திகதி வெடிக்கத் தொடங்கியது. அதில் இருந்து புகை வெளியேறி 2,300 அடி உயரத்துக்கு எழுந்தது. இதனால் எப்போது வேண்டுமானாலும் இந்த எரிமலை வெடித்துச் சிதறும் நிலை உள்ளது.

எனவே, அதன் அருகே தங்கியிருக்கும் கிராம மக்களை வெளியேறும் படி உத்தரவிடப்பட்டது. அதைத் தொடர்ந்து இதுவரை ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குடும்பம் மற்றும் கால் நடைகளுடன் வெளியேறி விட்டனர்.

இந்த நிலையில், இந்த வாரத்தில் இரண்டாவது முறையாக எரிமலையில் இருந்து தொடர்ந்து அதிக அளவில் புகை வெளியேறி வருகின்றது. இதன் காரணமாக விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்து விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் அங்குள்ள விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

இங்கு 1963ஆம் ஆண்டு அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்பு எரிமலை வெடித்தது. அப்போது ஆயிரத்து 600 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர் தற்போது தான் இந்த எரிமலை வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## வெற்றுத் துப்பாக்கியைக் காட்டி கொள்ளையடிக்க முயன்ற மூதாட்டி



குண்டு இல்லாத வெற்றுத் துப்பாக்கியைக் காட்டி அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் உள்ள வங்கியில் கொள்ளையடிக்க முயன்ற 86 வயது மூதாட்டி கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் உள்ள வங்கியில் காலையில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது அங்கு 86 வயது மூதாட்டி உள்ளே வந்தார்.

நடக்க முடியாத நிலையில் இருந்த அவர் ஊன்றுகோல் (வோக்கிங் ஸ்ரிக்) வைத்து இருந்தார். அப்போது திடீரென தான் வைத்திருந்த ஒரு துப்பாக்கியைக் காட்டி அனைவரையும் மிரட்டினார். அதனால் வங்கியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

உடனே அங்கு விரைந்த பொலிஸார் மூதாட்டியைக் கைது செய்தனர். அப்போது அவர் மயங்கி விழுந்தார். முதலுதவிச் சிகிச்சைக்குப் பின் அவரிடம் பொலிஸார் விசாரித்தனர். அப்போது தான் வைத்திருந்தது குண்டுகள் நிரப்பாத வெற்றுத் துப்பாக்கி என அவர் தெரிவித்தார். அது போன்று துப்பாக்கியில் குண்டுகள் இல்லை. அவரது கைப்பையிலும் குண்டுகள் காணப்படவில்லை.

இச்சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் பாட்டி இதே வங்கிக்கு வந்தார். அப்போது அவரிடம் இருந்து 400 டொலர் அபராதமாக வசூலிக்கப்பட்டது. அதை மீண்டும் திரும்ப பெறவே கொள்ளையில் இறங்கினேன் என்று தெரிவித்துள்ளார்.

# இலகு வெற்றியுடன் ஆஸ் தொடரை ஆரம்பித்த ஆஸி



தற்பொழுது நடைபெற்று வரும் 2017/2018 ஆண்டுக் காலப்பகுதிக்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுக் களால் அபாரமாக வெற்றி பெற்றுத் தொடரைச் சிறந்த முறையில் ஆரம்பித்துள்ளது.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிக ளுக்கு இடையில் இடம்பெறும் பெரும் மோதலான ஆஷஸ் கிண்ணத் தொடரின் இம்முறை போட்டிகள் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமானது. பெரும் எதிர்பார்ப்புக ளுக்கு மத்தியில் இடம்பெறும் இப்போட்டித் தொடர் 70ஆவது தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே நடைபெற்ற 69 தொடர்களில்



இரு அணிகளும் தலா 32 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் 5 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. எனவே இம்முறைத் தொடர் மிகவும் தீர்மானம் மிக்கதாக அமைந்துள்ளது. அதுபோன்றே, அண்மைய காலங்களில் இரு அணிகளும் வெளிப்படுத்திய திறமைகளின் பொருட்டு பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இத்தொடர் ஆஸ்திரேலிய நாட்டின் 5 நகரங்களில் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது போட்டி பிரிஸ்பேன் நகரின் கப்பா அரங்கில் ஆரம்பமானது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் படி களமிறங்கிய இங்கிலாந்து தமது முதல் இன் னிங்ஸூக்காகச் சகல விக்கெட்டுகளையும் இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலஸ்டயர் குக் 2 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழந்தாலும் ஜேம்ஸ் வின்ஸ் மற்றும் மார்க் ஸ்டோன்மன் ஆகியோர் முறையே பெற்ற 83, 53 ஓட்டங்களின் உதவியுடனும் பின்வரிசையில் வந்த டேவிட் மாலன், மொயின் அலி மற்றும் ஸ்டோர்ட் ப்ரோட் ஆகியோர் முறையே பெற்ற 56, 38, 20 ஓட்டங்களின் உதவியுடனும் 302 ஓட்டங்களை இங்கிலாந்து அணி கடந்தது. பந்து வீச்சில் மிச்சல் ஸ்டார்க் மற்றும் பெட் கம் மின்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸினைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுகளை இழக்க ஆரம்பித்தது. எனினும் மறுமுனையில் நிதானமாக அணித் தலைவர் என்ற பொறுப்புடன் ஆடிய ஸ்மித் சதம் கடந்ததுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது 141 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலிய அணியினைக் கௌரவமான நிலைக்கு (328 ஓட்டங்கள்) இட்டுச் சென்றார். பந்து வீச்சில் இங்கிலாந்து அணியின் ப்ரோட் 3 விக்கெட்டுகளையும் அண்டர்சன் மற்றும் மொய்ன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி 26 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த நிலையில் தொடர்ந்து தமது இரண்டாவது இன்னிங்ஸினைத் தொடர்ந்த இங்கிலாந்து அணிக்கு அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலஸ்டயர் குக் மீண்டும் ஏமாற்றமளித்தார். முதல் இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஜேம்ஸ் வின்ஸ்சும் வந்த வேகத்தில் ஓய்வறை திரும்ப இங்கிலாந்து அணி தடுமாற்றத்தினை எதிர்நோக்கியது.

தொடர்ந்து மிகச்சிறப்பாகப் பந்து வீசிய ஆஸ்தி ரேலிய அணி இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக் களைத் தொடர்ச்சியான இடைவெளிகளில் கைப் பற்றியது. எனினும் மறுமுனையில் நிதானமாக ஆடிய அணித் தலைவர் ஜோ ரூட் 51 ஓட்டங்க ளைப் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார். பின்வரிசையில் வந்த மொயின் அலி மற்றும் ஜோன்னி பார்ட்சோ ஆகியோர் நிதானமாகத் துடு பெடுத்தாடிய போதும் இருவரும் அரைச் சதத்தை அண்மித்த வேளை ஆட்டமிழந்தனர்.

ஏனைய வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி தமது 2ஆவது இன்னிங்ஸூக் காகச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இங்கிலாந்து சார்பில் மொயின் அலி 40 ஓட்டங்களையும் ஜோன்யி பெர்ட்சோ 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணியின் மிச்சல் ஸ்டார்க், நதன் லியோன் மற்றும் ஜோஸ் ஹசல் வூட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் தீர்மானம் மிக்க இந்த தொடரின் முதல் போட்டி வெற்றிக்காக 170 என்ற இலகுவான இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸ் திரேலிய அணி டேவிட் வோர்னர் மற்றும் பென்க் ரோப்ட் ஆகியோரின் மிகச்சிறப்பான இணைப்பாட் டம் மூலம் எவ்வித விக்கெட் இழப்புமின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

சிறந்த முறையில் துடுப்பாடிய டேவிட் வோர்னர் ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களையும், கேமரோன் பென்க்ரோப்ட் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் சிறப் பாட்டக்காரராக ஸ்டீவன் ஸ்மித் தெரிவுசெய்யப் பட்டார்.

கடந்த 1988ஆம் ஆண்டில் இருந்து இதுவரை அவுஸ்திரேலிய அணி கப்பா மைதானத்தில் எந்தவொரு போட்டியிலும் தோல்வியடைந்த தில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை அடிலைட்டில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ் டெஸ்ட் மொயின் அலியின் ஆட்டமிழப்பு குமுறும் ரசிகர்கள்

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் மொயின் அலி ஸ்டம்பிங் முறையில் ஆட்டமிழந்து வெளியேறியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான 5 போட்டி கள் கொண்ட ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்போனில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி தடுமாறிக் கொண்டிருந்த போது, மொயின் அலி மற்றும் பேர்ஸ் டோ சிறப்பாக ஆடி வந்தனர். அப்போது எதிர்பாரதவிதமாக மொயின் அலி ஸ்டம்பிங் ஆனார், இது மூன்றாவது நடுவருக்குக் கொண்டு செல்லப்பட்ட போது, மொயில் அலி ஆட்டமிழந்தார் என்று அறிவிக்கப்பட்டு வெளியேறினார்.

இந்த நிலையில் சமூக வலைத்தளங்களில் 3ஆவது நடுவரின் தீர்ப்புப் தொடர்பாக ஏகப்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதாவது கிரிஸ் கோட் டின் அடர்த்தியையும், அது முதலில் நேராக இருந்ததா என்ற கேள்வியையும் எழுப்பி வருகின்றனர்.

அதுமட்டுமின்றி கால் கிரிஸின் உள்ளே தான் சற்று இருந்தது என்று இங்கிலாந்து ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர். அப்படி அது ஆட்டமிழப்பு இல்லை என்றால், இங்கிலாந்து அணி, தற்போது தோற்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்காது என்றும் கூறி வருகின்றனர். ஆனால் மொயின் அலியோ இதை பெருந்தன்மையாக அணுகியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், என்னைப் பொறுத்தவரை கிரீஸ் கோடு, அதில் கால் பதிந்த இடம் ஆகியவற்றை ஒருவர் எந்தக் கோணத்திலி ருந்து பார்க்கிறார் என்பதைப் பொறுத்ததாகும். நடுவர் தீர்ப்பை மதிக்க வேண்டும். பிறகு அடுத்தகட்டம் நோக்கி நகர வேண்டும் எனக் கூறியுள்ளார்.





### நாக்பூர் டெஸ்ட்:

# இன்னிங்ஸ், 239 ஓட்டங்களால் இலங்கையை சாய்த்தது இந்தியா

நாக்பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா - இலங்கை இடையிலான 2ஆவது டெஸ்ட் நாக்பூரில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்த இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களில் சுருண்டது. அஸ்வின் 4 விக்கெட்டுகளையும், ஜடேஜா மற்றும் இசாந்த் சர்மா தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

பின்னர் ஆடிய இந்தியா முதல் இன்னிங்ஸில் 610 ஓட்டங்கள் குவித்து, மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. கோஹ்லி 213 ஓட்டங்கள் விளாசினார். முரளி விஜய் 128 ஓட்டங்களும், புஜாரா 143ஓட்டங்களும், ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களும் எடுத்தனர். இதன்மூலம் இந்தியா 405 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதையடுத்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

இந்த நிலையில் நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து ஆடிய இலங்கை அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. கருணாரத்ன 18 ஓட்டங்களிலும், திரிமன்னே 23 ஓட்டங்களிலும், மத்தியூஸ் 10 ஓட்டங்களிலும், டிக்வெல்ல 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். 75 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

அதன்பின்னர் அணித் தலைவர் சந்திமல் நிதானமாக ஆடி, விக்கெட்டைக் காப்பாற்றப் போராடினார். ஆனால், மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்தன. சானக (17), பெரேரா (0), ஹேரத் (0) ஆகியோரை அஸ்வின் வெளியேற்றினார். இதனால், இலங்கை அணி தோல்வியை நோக்கிப் பயணித்தது.

இந்தப் போராட்டத்திற்கு மத்தியிலும் பொறுப்புடன் ஆடிய சந்திமல் அரை சதம் கடந்தார். தொடர்ந்து ஆடிய அவர் 69 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் கமேஜ் (0) ஆட்டமிழக்க, இலங்கை அணி 166 ஓட்டங்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அஸ்வின் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். ஜடேஜா, உமேஷ் யாதவ், இசாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1:0 என முன்னிலை பெற்றுள்ளது.



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து தொடர்ச்சியாக விளையாடி வரும் இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லிக்கு எஞ்சிய இலங்கைத் தொடருக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எம்.எஸ்.கே. பிரசாத் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவினர் நாக்பூரில் கூடி 4 வகையான இந்திய அணியைத் தெரிவு செய்ய இருக்கிறார்கள். டில்லியில் வருகிற 2ஆம் திகதி தொடங்கும் இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட், அதைத் தொடர்ந்து நடக்கும் அந்த அணிக்கு எதிரான 3 ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டி, தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகிய போட்டிகளுக்குத் தனித்தனியாக இந்திய அணியைத் தேர்வு செய்யவுள்ளனர்.

இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து தொடர்ச்சியாக விளையாடி வரும் இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லிக்கு எஞ்சிய இலங்கைத் தொடருக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று தெரியவந்துள்ளது. அதனால் கடைசி டெஸ்டில் இந்திய அணியை ரஹானே வழிநடத்துவார். இதே போல் இலங்கை உடனான ஒரு நாள் மற்றும் 20 ஓவர் போட்டிக்கு இந்திய அணியின் தலைவராக ரோகித் சர்மா செயற்படுவார் என்று தெரிகிறது.

தென்னாபிரிக்க தொடருக்கு இந்திய அணியில் 17 பேர் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்க மண்ணில் வேகப்பந்து வீச்சு எடுபடும் என்பதால் 5 வேகப்பந்து வீச்சாளர்கள் சேர்க்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கோஹ்லிக்கு ஓய்வு



### ஆஷஸ் தொடர்:

# எல்லை மீறிய அண்டர்சன்; பொறுமை காத்த கமரூன்!



பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன், ஆஸ்திரேலியா வீரர் கமரூன் பேன்கிராப்ட்டின் இடுப்பில் பந்தை எறிந்தமைகாணொலியாக வெளியாகியுள்ளது.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது.இப்போட்டியின்போது, இரண்டாவது இன்னிங்ஸில் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராடி வந்த நேரத்தில், இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர், அண்டர்சன் விக்கெட் எதுவும் விழாத காரணத்தால், ஆஸ்திரேலிய வீரர் கமரூன் பேன்கிராப்ட் அடித்த பந்தை எடுத்து அவரை ஓட்ட ஆட்டமிழப்பு செய்வது போல், அவரது இடுப்பில் எறிந்தார்.

ஆனால், கமரூன் பேன்கிராப்ட் ஆத்திரப்படாமல், பந்தை எடுத்து மீண்டும் அண்டர்சனிடம் எறிந்தார். இது கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# தென்னாபிரிக்க வீரர் 191 பந்தில் முச்சதம்

தென்னாபிரிக்க வீரர் மார்கோ மரைஸ் 191 பந்தில் முச்சதம் அடித்து, விரைவாக முச்சதம் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்காவில் மூன்று நாள்கள் கொண்ட முதல்தர உள்ளூர் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பார்டர் - ஈஸ்ரன் பிரோவின்ஸ் அணிகள் மோதின. இதில் பார்டர் அணிக்காக விளையாடியவர் மார்கோ மரைஸ். இவர் 68 பந்தில் சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடி 139 பந்தில் இரட்டைச் சதம் அடித்தார். அத்துடன் நிற்காமல் 191 பந்தில் முச்சதம் அடித்தார்.

இதன்மூலம் விரைவாக முச்சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். பார்டர் அணி 84 ஓட்டங்



களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 6ஆவது வீரராகக் களம் இறங்கிய 24 வயதான மார்கோ, 13 சிக்ஸர்கள் மற்றும் 35 பவுண்டரிகளுடன் முச்சதத்தைப் பெற்றார்.

1921ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் சார்லஸ் மெகார்ட்னெ 221 பந்தில் 300 ஓட்டங்கள் அடித்தமை சாதனையாக இருந்தது. தற்போது அதை மார்கோ முறியடித்துள்ளார்.

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

போர் முடிவடைந்த பின்னர் முதல் தடவையாக தாயகத்தில் உள்ள அனைத்து துயிலும் இல்லங்களிலும் நேற்று மாலை சமநேரத்தில்சுடர்கள்கொளுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், பல்கலைக் கழகங்கள் என்பவற்றில் நேற்று மாவீரர்நாள்உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தாயக தேசத்தில் நிலைகொண் டிருந்தபோது கடைப்பிடிக்கப் பட்டதைப் போன்று, இம்முறை மாவீரர் தினம் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்டது.

போர் முடிவடைந்த பின்னர் முதல்தடவையாக17மாவீரர்துயி லும் இல்லங்களிலும் சம நேரத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

துயிலும்இல்லங்களில்சிவப்பு, மஞ்சள்கொடிகள்பட்டொளிவீசிப் பறந்தன. மாவீரர் எழுச்சிக் கீதங் கள் காலையிலிருந்து ஒலிக்க விடப்பட்டிருந்தன.

நேற்று மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு, 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நிகழ்வு நடைபெற்றது. மாவீரர்கள்நினை வான ஈகச் சுடர்கள் கொளுந்து விட்டுப் பிரகாசமாக எரிந்தன. அதனைத் தொடர்ந்து, மாவீரர் துயிலும் இல்லப்பாடல் ஒலிக்க விடப்பட்டது. பாடல் இசைக்கப் பட்டபோது, மாவீரர்களின் பெற் றோர், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் உயிர்நீத்த தமது சொந்தங்களை நினைத்துக் கதறி அழுதனர். கல்லறைகள் இருந்த இடங்களைக் கட்டிய ணைத்து ஒப்பாரி வைத்தனர்.

அந்தக் காட்சி துயிலும் இல் லங்களில்இருந்தவர்கள்அனை வரையும் சோகத்தில் ஆழ்த்தி யது.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு – உடுத்துறை துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வு நடைபெற்றது . அங்கு மேஜர் கிண்ணி மற்றும் மேஜர் முரளி ஆகிய மாவீரர்களின் தயார் கிண்ணியம்மா பிரதான ஈகச் சுடரை ஏற்றினார்.

தீவகத்தின்சாட்டிப்பிரதேசத்தில், மாவீரர்களான நீலவண்ணன், நீலவிழி, நீலமகள் ஆகியோரின் பெற்றோர் பிரதான ஈகச்சுடரை ஏற்றினார்கள்.

யாழ்.மாவட்டத்தில்இராணுவத் தின் கட்டுப்பாடுகளிலுள்ள கோப்பாய், கொடிகாமம், எள் ளங்குளம் மாவீரர் துயிலும் இல் லங்களுக்கு அருகிலும் இராணு வப் புலனாய்வாளர்களின் மிரட்டல்களுக்கு மத்தியிலும் சிவப்பு – மஞ்சள்கொடிகள்கட்டப் பட்டு மாவீரர் வளைவுகளும் அமைக்கப்பட்டு மாவீரர் நினை வாக ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

அதேவேளை, குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகள் மற்றும் கேணல் கிட்டு ஆகியோரின் நினைவுச் சின்னங்கள் அமைந்திருந்த வல்வெட்டித்துறை – தீருவில் திடலிலும் பெரும் எழுச்சியுடன் நேற்று மாலை மாவீரர் தின நிகழ்வுகள்நடைபெற்றன.அங்கு 4 மாவீரர்களின் தாயான கந்தசாமி ஈஸ்வரி அம்மா பிர தான ஈகச்சுடர் ஏற்றினார்.

கடலிலேயே வீரச்சாவடைந்த மாவீரர்கள்நினைவாகவடமராட்சி – தொண்டமானாறுக் கடலிலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடை பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், முழங்காவில் இரு துயிலும் இல்லங்களிலும் மாவீ ரர்நாள்நிகழ்வுகள்நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் மேஜர் பசீலனின் தாயார் பிரதான ஈகச்சுடரை ஏற்றினார். தேராவில் துயிலும் இல்லத்தில்மாவீரர்நெடியவனின் தாயார் கனேசன் ஜானகி ஈகச் சுடரை ஏற்றினார். வன்னி விளாங்குளம், இரணைப்பாலை, கூழா முறிப்பில் உள்ள துயிலும் இல்லங்களிலும் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்றுப் பெரும் எடுப்பில் கடைப்பிடிக்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் ஈச் சங்குளம்துயிலும் இல்லத்திலும் மாவீரர்நாள்நினைவுகூரப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஆட் காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் லெப்.கேணல் வன்னிமன்னனின் தாயார் திருமதி லூசியா பிரதான ஈகச் சுடரை ஏற்றினார்.

ஆண்டான்குளத்தில் மூன்று மாவீரர்களின் தந்தையான ஞானப்பிரகாசம் பிரதான ஈகச் சுடரை ஏற்றினார்.

திருகோணமலைமாவட்டத்தில் சம்பூர் – ஆலங்குளத்திலும், மட் டக்களப்பு மாவட்டத்தில் தர வையிலும், மாவடிமுன்மாரி யிலும், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறிலும் மாவீரர் தின நிகழ்வுகள்நேற்றுநடைபெற்றன.

இதேவேளை, கடந்த காலங் களைப் போன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வந் தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழத்திலும் மாவீரர் நாள் நிகழ் வுகள் நடைபெற்றன. இரு பல் கலைக்கழகங்களும் சிவப்பு – மஞ்சள் கொடிகளால் அலங்க ரிக்கப்பட்டு எழுச்சியுடன் கம்பீர மாக நேற்றுக் காட்சியளித்தன.

இதுதவிர, மாலை 6.05 மணிக்கு ஆலயங்களிலும், பொதுவான இடங்களிலும் மற் றும் வீடுகளிலும் மாவீரர்கள் நினைவாக ஈகச் சுடர்கள் ஏற்றப் பட்டன.

இதேவேளை, புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் தின நிகழ்வுகள்நேற்றுஉணர்வெழுச் சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகர்களுக்குத் தேர்தல் கள் ஆணைக்குழு நேற்று நண்பகல் அறிவித்தல் வழங்கி யது.

டிசெம்பர்11ஆம்திகதியிலிருந்து டிசெம்பர்14ஆம்திகதிநண்பகல் 12மணிவரைவேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல் கள் ஆணைக்குழு அறிவுறுத்தி யுள்ளது.

அச்சுப் பிழைகள் காரணமாக தேர்தல் நடத்த முடியாதுள்ள 40 சபைகள் தொடர்பாகத் திருத் தப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டால், அவற்றுக் கான வேட்புமனுக்களைக் கோரும் அறிவிப்பும் வெளியி டப்படும்.

தேர்தலில் போட்டியிடும் அர சியல்கட்சிகள்மற்றும்சுயேட்சைக் குழு வேட்பாளர்கள், நேற்றுத் தொடக்கம்டிசெம்பர்13ஆம்திகதி வரைகட்டுப்பணத்தைச்செலுத்த முடியும்என்றும்தேர்தல்ஆணை யக்குழு தெரிவித்தது.

வடக்கு மாகாணத்தில் சாவ கச்சேரி நகர சபைக்கு மட்டுமே தேர்தல் இடம்பெறுகின்றது.

## நாடாளுமன்றத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி வீரவணக்கம் செலுத்தப் பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றஅமைச்சுகளுக்கான நிதிஒதுக்கீடுமீதானவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ் கந்தராஜாவினால் மாவீரர் களுக்கு வீரவணக்கம் செலுத் தப்பட்டது.

இன்றுகார்திகை27ஆம்திகதி. தாயகக்கனவோடு ஆகுதியாகிய மாவீரர்களுக்கு வீரவணக் கத்தைத்தெரிவித்துக்கொள்கின் றேன்.இராணுவமுகாம்களாக்கப் பட்டுள்ள மாவீரர் துயிலும் இல் லங்கள் விடுவிக்கப்பட்டு அடுத்த வருடம் அனைத்து மாவீரர் துயி லும் இல்லங்களில் அஞ்சலி செலுத்தும் வாய்ப்பை அரசு செய்து கொடுக்க வேண்டும்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 8 வருடங்கள் முழந்து வடக்கு, கிழக்குப் பெண்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்ற மும் ஏற்படவில்லை. எனவே, வடக்கு,கிழக்குப்பெண்கள்குறித்து விசேட கவனம் செலுத்த வேண் டும் என்றும் இதன்போது அவர் கூறினார்.

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராசா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் வடக்கு மாகாணஅவைத்தலைவர்சி.வீ. கே.சிவஞானம்மற்றும்கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

## ஒட்டகப்புலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– தெல்லிப்பழை – அராலி வீதி யில்வசாவிளானுக்கும்,அச்சுவே லிக்கும் இடைப்பட்ட பகுதியான ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா தேவாலயம் மற்றும்றோம ன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைஆகியவற்றின்காணி களே இவ்வாறு விடுவிக்கப்ப டவுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தெரிவித் தாளார்.

விடுதலைப்புலிகளின் தலை வர்பிரபாகரனின்பிறந்தநாளை வளாகத்தின்விடுதியில்முதலாம் வருடமாணவர்கள்நேற்றுமுன் தினம் கேக் வெட்டி கொண்டாடி னார்கள்.

இது தொடர்பான புகைப் படங்கள் முகப்புத்தகத்தில் பதி வேற்றப்பட்டதை அடுத்து, விடுதி யில் இருந்த சிங்கள மாணவர் கள் தமிழ் மாணவர்களுடன் முரண்பட்டுடன் தாக்குதலிலும் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன்வளாகமுதல்வரிடம் நேற்று முன் தினம் இரவு 10.30 மணிக்குச்சென்றசிங்களமாண வர்கள் தமக்குப் பாதுகாப்புத் தருமாறும் கோரிக்கை விடுத் தனர்.

இந் நிலையில் சிங்கள மாண வர்கள் சமூக வலைத்தளங் களில்தமிழ் மாணவர்களை அச் சுறுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்டமையால் தமிழ் மாணவர்களும் வளாகத்தின் முதல்வரிடம் தமக்கான பாது காப்பை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து இரு தரப்பி னரிடையே ஏற்பட்ட முரண்பாடு களைச் சமரசம் செய்வதற்கும் விசாரணைகளை நடத்துவதற் கும் ஏதுவாக வாளகத்தைக் காலவரையறையின்றி மூட நிர்வாகம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (100)

# தேர்தலைப் பிற்போடச் சதி; ஐ.தே.க. கடும் கண்டனம்

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட எடுக்கப்படும் சதித் திட்டங்களைஐக்கியதேசியக்கட்சி வன்மையாக கண்டிக்கிறது என நிதி இராஜாங்க அமைச்சர்எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றவெளிநாட்டுவேலை வாய்ப்பு பெண்கள் மற்றும் சிறு வர் நடவடிக்கைகள் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் தொடர்பிலானஅமைச்சுக்களின் நிதிஒதுக்கீடுகுறித்துவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூடிமறைத்து நாட்டைத் தவ றாக வழிநடத்த நாம் விரும்ப வில்லை. உரிய காலத்திற்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சி யின் உறுதியான நிலைப்பாடு.

உருவாக்கப்படும் புதிய அரச மைப்பில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய தினங்களைக் குறிப் பிடவேண்டும். உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுவதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதித் திட்டங்களைஐக்கியதேசியக்கட்சி வன்மையாக கண்டிக்கின்றது – என்றார்.

# சக மாணவர்களைக் கத்தியால் குத்திய மாணவன் கைதானார்

சக மாணவர்கள் இரண்டு பேரைக் கத்தியால் குத்திக் காயப் படுத்திய மாணவன் ஒருவனைப் பொலிஸார் கைது செய்தனர்.

கொஸ்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் இந்தக் கத் திக்குத்துச்சம்பவம்இடம்பெற்றது.

தாக்குதல்சம்பவத்தில்காயம டைந்த இரண்டு மாணவர்களும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.இரண்டுமாணவர்களும் கடுமையான வெட்டுக் காயங் களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தில் காய மடைந்த ஒரு மாணவனின் நிலைமை கவலைக்கிடம் என வைத்தியசாலை வட்டாரத் தக வல்கள் தெரிவித்தன.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவரைப் பொலிஸார் கைது செய்துவிசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

## கோப்பாயிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் ஏற்பாட்டில் இராசபாதை வீதியில் நேற்று அலங்கரிப்பட்ட இடத்தில் ஆயிரக்கணக் கானோரின் அகவணக்கத்துடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் நகரிலிருந்து பின்வாங்கிய பின்னர் இம்முறை தான் கோப்பாய் துயிலும் இல் லத்துக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றதால் அங்கு விதைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான மாவீரர்களின் உறவுகள்திரண்டுஇந்தஅஞ்சலி யைச் செலுத்தினர்.

கோப்பாய் துயிலும் இல் லத்துக்குள் யாழ்ப்பாண பிரிகேட் இராணுவ முகாம் அமைந்துள் ளதால் மாவீரர் நாள் நிகழ்வு அதற்கு முன்பாகவுள்ள இராச பாதை வீதியில் இடம்பெற்றது. இராணுவத்தினரும்அந்தப்பகுதி யில் பிரசன்னமாகியிருந்தனர்.

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில், கிழக்குப் பல் கலைக்கழக கலை, கலாசார பீடத்தின்பீடாதிபதிஎம்.ரவிமற்றும் கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர்.

இதன் போது வீரமரணம் எய் திய மாவீரர்களுக்கு மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது.

அதனைத் தொடர்ந்து மாண வர் ஒன்றியத் தலைவரால் ஈகச் சுடரேற்றப்பட்டுப்பின்னர்கலந்து கொண்ட அனைவராலும் மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத் தப்பட்டது.

அத்துடன் மாவீரர் தினத்தைக் கௌரவிக்கும் முகமாக 'உயிர் கொடுத்த வீரர்களுக்காக உதிரம் கொடுப்போம்' எனும் தொனிப் பொருளில் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக் கது.

அத்துடன்மாவீரர்பாடல்களும் ஒலிக்கச்செய்ததுடன்,புலிக்கொடி யும் கிழக்குப் பல்கலைக்கழகத் தின் நுழைவாயிலில் ஏற்றப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மழைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத் தினர்.

பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மாவீரர்களுக் கான நினைவிடத்தில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக் காலை நடத்தப்பட்டன.

இதன்போது தமிழ் மக்களின் விடுதலைக்காக களமாடி உயிர் நீத்த மாவீரர்களுக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப் பட்டது.

அதனைத் தொடர்ந்து பல் கலைக்கழக மாணவ, மாணவி கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர் சங்கத்தினர், ஊழியர் கள் எனப் பெருந்திரளானோர் மாவீரர் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்கள் நினைவாக நிகழ் வில் கலந்து கொண்ட அனை வருக்கும் பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டன.

## திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெற்றது.

முதன்மைச் சுடரைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு 3 பிள்ளைகளைத் தியாகம் செய்த வரும் அரசால் சிறைப்பிடிக்கப் பட்டவருமான அன்னை ஜெயக் குமாரி சுடரேற்றினார்.

வடக்கு மாகாண சபை உறுப் பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண அமைச்சர்அனந்திசசிதரன்உள் ளிட்ட பெருமளவானோர் பங் கேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அகிம்சை வழி யில் இந்தியாவிடம் தீர்வு கேட்டு உணவு ஒறுப்பிலிருந்து தியாக தீபம் திலீபன் உயிர் துறந்தார். திலீபனுக்கு இந்த நாளில் அஞ் சலி செலுத்துவது கட்டாயம் என சிவாஜிலிங்கம் கூறினார்.

# வாழ்க்கைச் செலவைக் குறைத்து வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் 'நல்லாட்சி'!



## பிரதமர் ரணில் தெரிவிப்பு



சமகால நல்லாட்சி அரசு மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி, வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கைமேற்கொண்டிருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாவலப்பிட்டி அமைப்பை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்பொழுது வாழ்க்கை செலவு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாம் பெரும் வறட்சியை எதிர்கொண்டோம். இதனால் சில பொருள்களின் விலைகள் அதிகரித்தன. இருப்பினும் இவற்றின் விலைகளை ஓரளவிற்கு கட்டுப்படுத்த எம்மால் முடிந்துள்ளது. அரசாங்க ஊழியர்களை போன்றே தனியார் துறையினரின் வருமானத்தை அதிகரிக்க எம்மால் முடிந்துள்ளது.

இதேபோன்று, இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, விரைவான அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் நாட்டை முன்னெடுத்து பெரும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

எதிர்வரும் தேர்தலில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலில் அதிகாரத்தை அரசாங்கம் பெற்றுக்கொண்ட பின்னர் இதுவரையில் தேசிய அரசாங்கம்மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிட்டும்.

மாகாணசபை, பிரதேச சபை அபிவிருத்தி பணிகளில் ஏற்படும் தடையை முடிவிற்கு கொண்டுவரவேண்டுமாயின் இந்த நிறுவனங்களின் அதிகாரம் உறுதிசெய்யப்படவேண்டும். இதன்பின்னர் நல்லாட்சி அரசுடன்இணைந்துசெயற்பட முடியும். எத்தகையோருடனும் ஒன்றிணைந்து முன்நோக்கி பயணிக்க முடியும்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் 2 வருட காலப்பகுதியில் இந்தப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு. கொழும் பிலிருந்து விரைவாக கண்டிக்கு பயணிக்ககூடிய நிலை ஏற்படும். கண்டியிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையில் பெரும்அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேயிலை விலையை நாம் கட்டுப்படுத்தினோம். தற்போது தேயிலைக்குஆகக்கூடுதலான விலை கிடைத்து வருகின்றது. இதனை தக்க வைத்துக்கொள்வதற்கு நாம் பெரும் வேலைத்திட்டத்தை முன் வைத்துள்ளோம்.

இந்தப்பணிகளைமேற்கொள்ளும் அதேவேளை வீடுகளையும் நாம் அமைக்கின்றோம். அமைச்சர் சஜித் பிரேமதாச முன்னெடுத்துள்ள வீடமைப்பு வேலைத்திட்டத்தில் கிராமிய நகரநடுத்தரவகுப்பினருக்கான வேலைத்திட்டம் விசேடமாக நகரங்களில் வாழும் நடுத்தர வகுப்பினருக்கு வீட்டுக்கான கடன்திட்டமும் வழங்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உரையாற்றுகையில்-

சிங்களம், தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும்ஐக்கியதேசியக்கட்சிதேவையாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு சொல்லை நம்பி 2015ஆம் ஆண்டில்புதிய ஜனாதிபதி ஒரு வரை நியமிப்பதற்காக தமிழ் முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளை வழங்கினர்.

நாவலப்பிட்டி என்பது அனைத்து மக்களையும் ஒன்றிணைத்த தொகுதி என்று குறிப்பிடலாம். தோட்ட மக்கள் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுடன் கைகோத்து எதிர்வரும் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் வெற்றிக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொழிலாளர் தேசிய சங்கத் தலைவராக மீண்டும் அமைச்சர் திகாம்பரம் தெரிவு




தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக மீண்டும் அமைச்சர் திகாம்பரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் 15 ஆவது பேராளர் மாநாடு நேற்று ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, பொதுச் செயலாளராக எஸ்.பிலிப், பிரதி பொதுச் செயலாளராக எம்.திலகராஜா, நிதி செயலாளராக ஜே.எம். செபஸ்டியன், உதவி நிதி செயலாளராக சோ.ஸ்ரீதரன், பிரதி தலைவராக உதயகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், சிரேஷ்ட ஆலோசகராக சிங்.பொன்னையா, மகளிர் அணித் தலைவி சரஸ்வதி சிவகுரு, தேசிய அமைப்பாளராக நகுலேஸ்வரன், இளைஞர் அணித் தலைவர் பா. சிவனேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விபசார விடுதி முற்றுகை: பெண்கள் இருவர் கைது

கொழும்பு, நவ. 28

கல்கிஸ்ஸை - அத்திட்டிய பிரதேசத்தில் இயங்கிய பாலியல் தொழில் விடுதி ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கு முகாமையாளராகப் பணியாற்றிய பெண் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெண்ணொருவரையும் கல்கிஸ்ஸைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மசாஜ் நிலையம் என்ற பெயரில் இவர்கள் இந்த பாலியல் தொழில் விடுதியை நடத்தி வந்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

21 மற்றும் 32 வயதான இந்தப் பெண்கள் பாதுக்க மற்றும் வாதுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# புதிய காற்றழுத்த தாழ்வு நிலை; வடக்கின் பல பகுதிகளில் வெள்ளம்



யாழ்ப்பாணம் வடக்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெய்தகடும் மழை காரணமாக பல இடங்களிலுள்ள வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஆகக்கூடிய மழைவீழ்ச்சி முல்லைத்தீவு மற்றும் வவுனியா பிரதேசங்களில் பதிவாகியுள்ளன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிய குளங்களில் நீர் நிரம்பியுள்ளதனால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தென் இலங்கை மற்றும் அதனை அடுத்துள்ள தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி நீடிப்பதால் தென் தமிழகத்தின் அநேக இடங்களில் எதிர்வரும் 2 நாள்களுக்கு கடும் மழை பெய்யக்கூடும்என்று சென்னை வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை அடுத்துள்ள பகுதியில் குறைந்த தாழ்வு பகுதி இடம்பெற்றிருந்தது. இது மேற்குநோக்கி நகர்ந்து தற்பொழுது தென்இலங்கை மற்றும் தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இதன் காரணமாக இரு நாள்களுக்கு தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும் வட தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கடும் மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் நீடிக்கும் காற்றழுத்த தாழ்வு பகுதி எதிர்வரும் 48 மணிநேரங்களில் தென்கிழக்கு அரபிக் கடல் அதை அடுத்துள்ள லட்சத்தீவுப்பகுதிக்குச் செல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து புதிய காற்றழுத்த தாழ்வு நிலை தென் மேற்கு வங்கக்கடலில் நாளை 29ஆம் திகதி உருவாக வாய்ப்பு இருக்கின்றது எனவும் சென்னை வானிலை நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir




கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக.....


சாவகச்சேரி பஸ் நிலையத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி..


கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி..


உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி..


கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல்...



தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி...


வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி..


முள்ளிவாய்க்காலில் விதைக்கப்பட்ட மாவீரர்களுக்கும் அஞ்சலி.




சாட்டி துயிலும் இல்லத்தில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வு...


யாழ். இந்துக் கல்லூரி வீதியில் மாவீரர்களுக்கு அஞ்சலி.


இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வ அஞ்சலி...


கண்ணீரில் நனைந்தது வன்னிவிளாங்குளம்...


வடமராட்சி தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி...


உரும்பிராய் மிக்கேல் ஆலயத்தில் மாவீரர் தினச் சிறப்பு வழிபாடு


மன்னார் ஆள்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் திரண்டு அஞ்சலி.


வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தில் பொலிஸாரின் தடையையும் மீறி அஞ்சலி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.